# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2154/50 - 2019 දෙසැම්බර් මස 20 වැනි සිකුරාදා - 2019.12.20

*2154/50 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்**

அறிவித்தல்

இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்காகவும் வருமான வரிகளை செலுத்தாது தட்டிக்கழிப்பதனைத் தடுப்பதற்காகவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் ஓமான் சுல்தான் இராச்சிய அரசாங்கத்திற்கும் இடையில் 2018.08.15 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட, இங்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இரு தரப்பு ஒப்பந்தத்திற்கு 2019.10.23 ஆந் திகதி நிறைவேற்றப்பட்ட பிரேரணையின்படி பாராளுமன்றத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என்பதனை 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 75 (1) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எஸ். ஆர். ஆட்டிகல,<br>
செயலாளர்,<br>
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு.

நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,<br>
கொழும்பு 01,<br>
2019, திசெம்பர் 19.

**அட்டவணை**

**வருமானம் மீதான வரிகள் தொடர்பில் இரட்டை வரி விதிப்பைத் தவிர்ப்பதற்காகவும் வரி செலுத்தாது தட்டிக் கழிப்பதனைத் தடுப்பதற்காகவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் ஓமான் சுல்தான் இராச்சிய அரசாங்கத்திற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கமும் ஓமான் சுல்தான் இராச்சிய அரசாங்கமும் வருமானம் மீதான வரிகள் தொடர்பில் இரட்டை வரி விதிப்பைத் தவிர்ப்பதற்காகவும் வரி செலுத்தாது தட்டிக் கழிப்பதனைத் தடுப்பதற்காகவும் கீழே தரப்பட்டுள்ளவாறு உடன்பாடு கண்டுள்ளன.


1A-G 31694 - 67 (2019/12)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*உறுப்புரை 1*

**உள்ளடக்கப்படும் ஆட்கள்**

ஒப்பந்த அரசுகளில் ஒன்றில் அல்லது இரண்டிலும் வதியும் ஆட்களின் மீது இவ் ஒப்பந்தம் ஏற்புடையதாகுதல் வேண்டும்.

*உறுப்புரை 2*

**உள்ளடக்கப்படும் வரிகள்**

1. ஒப்பந்த அரசு ஒன்றின் சார்பில் விதிப்பனவு செய்யப்படும் வருமானம் மீதான வரிகள் தொடர்பில், அவை அறவிடப்படும் முறைகளைக் கவனத்தில் கொள்ளாது இவ் ஒப்பந்தம் ஏற்புடையதாகுதல் வேண்டும்.

2. அசையும் மற்றும் அசையா ஆதனங்களைப் பாராதீனப்படுத்துவதிலிருந்து பெறப்படும் சம்பாத்தியங்கள் மீதான வரிகள், உருவகங்களினால் கொடுப்பனவு செய்யப்பட்ட கூலிகள் அல்லது சம்பளங்களின் மொத்த தொகை அவ்வாறே மூலதன விரிவாக்கம் என்பவற்றின் மீதான வரிகள் உள்ளடங்கலான மொத்த வருமானத்தின் மீது அல்லது அதன் ஒரு பகுதியின் மீது விதிப்பனவு செய்யப்படும் அனைத்து வரிகளும் வருமானத்தின் மீதான வரிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

3. ஏற்புடையதாகும் இவ் ஒப்பந்தத்தில் தற்போது நடைமுறையிலுள்ள வரிகளாவன :

(அ) இலங்கையில் ;

முதலீட்டுச் சபையில் பதிவுசெய்யப்பட்ட தொழில் முயற்சிகளின் புரள்வின் அடிப்படையிலான வருமான வரி உள்ளிட்ட வருமானவரி.
(இதனகத்துப் பின்னர் "இலங்கை வரி" என அழைக்கப்படும்.)

(ஆ) ஓமானில் ;

வருமான வரி
(இதனகத்துப் பின்னர் "ஓமான் வரிகள்" என அழைக்கப்படும்.)

4. தற்போது நடைமுறையிலுள்ள வரிகளுக்கு மேலதிகமாக அல்லது அவற்றிற்குப் பதிலாக இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட திகதியின் பின்னர் வருமானத்தின் மீது விதிப்பனவு செய்யப்படும் ஏதேனும் அதற்குச் சமமான அல்லது பெருமளவில் சமமான வேறு ஏதேனும் வரிகள் தொடர்பிலும் இவ் ஒப்பந்தம் ஏற்புடையதாகுதல் வேண்டும். ஒப்பந்த அரசுகளின் தகவுடைய அதிகாரிகள் தங்களது வரி விதிப்பனவுச் சட்டங்கள் தொடர்பில் செய்யப்படும் முக்கிய மாற்றங்கள் தொடர்பில் தங்களுக்குள் ஒருவருக்கு ஒருவர் அறியச் செய்து கொள்ளுதல் வேண்டும்.

*உறுப்புரை 3*

**பொது வரைவிலக்கணங்கள்**

1. இவ் ஒப்பந்த நோக்கங்களுக்காக, சொல்லமைவின்படி வேறுவிதமான கருத்து தேவைப்பட்டாலன்றி,

(அ) 'இலங்கை' என்ற சொல் சர்வதேச சட்டத்திற்கும் அதன் தேசிய அரசியலமைப்புக்களுக்கும் இணங்க, இலங்கை சனநாயக சோசலிச குடியரசு தனது இறைமை உரிமைகளையும் நீதிமன்ற நியாயாதிக்கத்தினையும் அமுல்படுத்துகின்ற அல்லது இதற்குப் பிறகு அமுல்படுத்தும் சாத்தியமுள்ள அதன் நிலப் பிரதேசம், உள்ளக நீர் நிலைகள், அரசுக்குச் சொந்தமான கடற் பிரதேசம், அதற்கு மேல் அமைந்துள்ள வான்வெளி என்பனவும் பிரத்தியேக பொருளாதார வலயம், கண்டமேடை என்பனவும் உள்ளிட்ட இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசிற்குச் சொந்தமான எல்லைகளைக் குறிக்கும்.

(ஆ) 'ஓமான்' என்ற சொல் ஓமான் சுல்த்தான் இராச்சியத்தையும் அதற்கு சொந்தமான தீவுகளையும் குறிக்கும். அதேவேளையில், புவியியல் ரீதியில் நோக்குமிடத்து 'ஓமான்' என்ற சொல், அதன் கடற் பிரதேசம், கடல் அடித்தளம், கரையோர கடற் பிரதேசங்களின் நிலக்கீழ் மண் மற்றும் சர்வதேச சட்டங்களுக்கும் ஓமான் சட்டங்களுக்கும் இணங்க, இயற்கை வளங்களை அல்லது மேற்குறிப்பிட்ட பிரதேசங்களை ஆய்வு செய்வதற்கு ஓமான் தனது இறைமை உரிமைகளைப் பிரயோகிக்கக் கூடிய உள்நாட்டுக் கடல் எல்லைகளுக்கு வெளியில் அமைந்துள்ள பிரதேசங்களையும் குறிக்கும்.

(இ) 'ஒப்பந்த அரசு' மற்றும் 'மற்றைய ஒப்பந்த அரசு' என்ற வாசகங்கள் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஓமான் அரசு மற்றும் இலங்கை அரசைக் குறிக்கும்.

(ஈ) 'ஆள்' என்ற சொல் தனியாள் ஒருவரை, கம்பனியொன்றை, ஆட்களின் குழுவொன்றினைக் குறிக்கும்.

(உ) 'கம்பனி' என்ற சொல் கூட்டிணைக்கப்பட்ட சபை ஒன்றை அல்லது வரி நோக்கங்களுக்காக கூட்டிணைக்கப்பட்ட சபையாகக் கருதப்படுகின்ற ஒன்றைக் குறிக்கும்.

(ஊ) 'ஒப்பந்த அரசு ஒன்றின் தொழில் முயற்சி' மற்றும் 'மற்றைய ஒப்பந்த அரசின் தொழில் முயற்சி' என்ற பதங்கள் முறையே ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் ஒருவரினால் கொண்டு நடாத்தப்படுகின்ற தொழில் முயற்சியினையும் மற்றைய ஒப்பந்த அரசில் வதியும் ஒருவரினால் கொண்டு நடாத்தப்படுகின்ற தொழில் முயற்சியினையும் குறிக்கும்.

(எ) 'சர்வதேச போக்குவரத்து' என்ற சொல் ஒப்பந்த அரசு ஒன்றில் அமைந்துள்ள தொழில் முயற்சி ஒன்றினால் இயக்கப்படுகின்ற கப்பல் அல்லது விமானம் ஒன்றின் மூலம், அக்கப்பல் அல்லது அவ் விமானம் மற்றைய ஒப்பந்த அரசின் நிலையங்களுக்கிடையில் மாத்திரம் நடாத்துகின்ற சந்தர்ப்பங்கள் தவிர்ந்த எந்தவொரு போக்குவரத்தினையும் குறிப்பிடும்.

(ஏ) 'நாட்டவர்' என்ற சொல்-

(i) ஒப்பந்த அரசு ஒன்றின் பிரசாவுரிமையினைப் பெற்றுள்ள ஆள் ஒருவரையும்

(ii) ஒப்பந்த அரசு ஒன்றில் நடைமுறையிலுள்ள சட்டத்தினூடாகக் குறித்த சட்ட அந்தஸ்தினைப் பெறுகின்ற சட்ட ரீதியான ஆள் ஒருவரை அல்லது பங்குடமை வியாபாரம் ஒன்றினை அல்லது கம்பனி ஒன்றினைக் குறிக்கும்.

(ஐ) 'தகவுடைய அதிகாரி' என்ற வாசகம்.-

(i) இலங்கையின் விடயத்தில்,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினை அல்லது ஆணையாளர் நாயகத்தின் அதிகாரம் பெற்ற முகவரைக் குறிக்கும்.

(ii) ஓமான் தொடர்பில்,
நிதி அமைச்சு அல்லது அதனது அதிகாரம் வழங்கப்பெற்ற முகவரையும் குறிக்கும்.

(ஒ) 'வரி' எனும் பதம் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு இலங்கை வரி அல்லது ஓமான் வரியைக் குறிப்பதோடு வரி செலுத்துதலைத் தவிர்த்தல், விடுத்தல் போன்ற காரணங்களுக்காகவும் இவ் ஒப்பந்தம் பொருந்தும் அல்லது பிரதிநிதித்துவப்படுத்தும் வரிகள் மீது விதிக்கப்பட்ட அபராதம் அல்லது தண்டப்பணத்தைக் குறிப்பதாக அமையாது.

2. ஒப்பந்த அரசு ஒன்று ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் இவ் ஒப்பந்தத்தினை ஏற்புடையதாக்குகையில், இதில் வரைவிலக்கணம் கூறப்படாத ஏதேனும் ஒரு சொல்லை, அதன் சொல்லமைவின்படி வேறுவிதமாக பொருள் கொள்ள வேண்டிய அவசியம் இருந்தாலேயன்றி, இவ் ஒப்பந்தத்துடன் தொடர்புடைய வரி நோக்கங்களுக்காக, அவ் அரசின் சட்டத்தின் கீழ், அச்சந்தர்ப்பத்தில் கொண்டுள்ள கருத்தையே கொள்ளுதல் வேண்டும். அத்துடன் அவ் அரசில் நடைமுறையிலுள்ள வரிச் சட்டங்களின் கீழ் அச்சொல் கொண்டுள்ள கருத்தைவிட விஞ்சி ஏற்புடையதாகுதல் வேண்டும்.

*உறுப்புரை 4*

**வதிபவர்**

1. இவ் ஒப்பந்த நோக்கங்களுக்காக, 'ஒப்பந்த அரசில் வதிபவர்' என்ற வாசகம், அவ் அரசின் சட்டத்தின் கீழ் எவரேனும் ஆள் ஒருவரின் நிரந்தர வதிவு, வதிவிடம், இணைப்பு நிலையம், பதிவு நிலையம், முகாமைத்துவ நிலையம் அல்லது அத்தகைய தன்மையினைக் கொண்ட வேறு ஏதேனும் அளவுகோள்களின் காரணமாக அவ் அரசு அடங்கலாக அந்நாட்டின் சட்டத்தின் கீழ் வரி செலுத்த வேண்டிய ஒரு நபரைக் குறிப்பிடுவதுடன் அவ் அரசும் அதன் ஏதேனும் நியதிச்சட்ட அமைப்பும் அதில் அடங்கும். எவ்வாறாயினும் அவ் அரசின் மூலங்களிலிருந்து கிடைக்கின்ற வருமானங்கள் தொடர்பில் மாத்திரம் அவ் அரசில் வரி விதிக்கப்படும் எவரேனும் நபரை இவ்வாசகம் குறிக்கமாட்டாது.

*2. 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு எவரேனும் ஆள் ஒருவர் ஒப்பந்த அரசுகள் இரண்டிலும் வதிபவராக இருக்குமிடத்து, அவரின் நிலை தொடர்பில் கீழே உள்ளவாறு தீர்மானித்தல் வேண்டும்:*

*(அ) அவருக்கு நிரந்தர வதிவிடம் உள்ள அரசில் மாத்திரம் அவர் வதிபவராகக் கருதப்படுவார்; மேலும், அவருக்கு இரு அரசுகளிலும் நிரந்தர வசிப்பிடம் காணப்படுமாயின், அவருக்கு மிகவும் நெருக்கமான தனிப்பட்ட மற்றும் பொருளாதார தொடர்புகள் காணப்படுகின்ற (அவரது மிக முக்கியமான தொடர்புகளின் மத்திய நிலையமாகவுள்ள) அரசில் மாத்திரம் அவர் வதிபவராகக் கருதப்படுதல் வேண்டும்;*

*(ஆ) அவரது மிகவும் முக்கியமான தொடர்புகளின் மத்திய நிலையமாகவுள்ள அரசினைத் தீர்மானிக்க முடியாதவிடத்து அல்லது ஒரு அரசிலேனும் அவருக்கு நிரந்தர வதிவிடம் எதுவும் காணப்படாதவிடத்து, அவர் வழமையாக வதியும் வதிவிடமுள்ள அரசில் மாத்திரம் அவர் வதிபவராகக் கருதப்படுதல் வேண்டும்;*

*(இ) அவருக்கு இரண்டு அரசுகளிலும் வழமையாக வதியும் வதிவிடங்கள் காணப்படுமிடத்து அல்லது ஒன்றிலேனும் அவ்வாறான ஒன்று காணப்படாதவிடத்து, அவர் நாட்டவராகவுள்ள அரசில் மாத்திரம் அவர் வதிபவராகக் கருதப்படுதல் வேண்டும்;*

*(ஈ) உப பந்திகள் (அ-இ) நிரல் தொடர்பில் வதிவிட நிலையைத் தீர்மானிக்க முடியாதவிடத்து இவ்விடயத்தினை ஒப்பந்த அரசுகளின் தகவுடை அதிகாரிகள் பரஸ்பர உடன்பாட்டின் மூலம் தீர்மானித்துக் கொள்ளுதல் வேண்டும்.*

*3. 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் காரணமாக தனியாளொருவர் அல்லாத ஆளொருவர் ஒப்பந்த அரசுகள் இரண்டிலும் வதிபவராக இருப்பின், அதன் செயற்பாட்டு செயலாக்கமுடைய முகாமைத்துவம் அமைந்துள்ள அரசில் மாத்திரம் வதிபவராகக் கருதப்படுதல் வேண்டும்.*

*உறுப்புரை 5*

**நிரந்தர தாபனம்**

*1. இவ் ஒப்பந்தத்தின் நோக்கங்களுக்காக 'நிரந்தர தாபனம்' எனும் சொல், தொழில்முயற்சியொன்றின் வியாபாரச் செயற்பாடுகள் முழுமையாக அல்லது பகுதியாகக் கொண்டு நடாத்தப்படும் நிலையான வியாபார நிலையத்தினைக் குறிக்கும்.*

*2. 'நிரந்தர தாபனம்' எனும் சொல் குறிப்பாக பின்வருவனவற்றினையும் உள்ளடக்கும்:*

*(அ) முகாமை நிலையமொன்று;*
*(ஆ) கிளையொன்று;*
*(இ) அலுவலகமொன்று;*
*(ஈ) தொழிற்சாலையொன்று;*
*(உ) வேலைத்தளமொன்று ; மற்றும்*
*(ஊ) சுரங்கமொன்று, எண்ணெய் அல்லது வாயுக் கிணறு ஒன்று, கற்குழியொன்று அல்லது இயற்கை வளத்தை மாற்றீடு செய்யும் வேறு ஏதேனும் இடம்.*

*3. இவ்வாறு 'நிரந்தர தாபனம்' எனும் சொல் பின்வருவனவற்றினையும் உள்ளடக்கும்:*

*(அ) கட்டிட வேலைத்தளம் ஒன்று, கட்டுமானம் ஒன்று, சேர்க்கும் அல்லது பொருத்தும் கருத்திட்டம், இயற்கை வளங்களைக் கண்டுபிடித்தல் அல்லது அபிவிருத்தி செய்தலுக்காகப் பயன்படுத்தப்படும் தோண்டு மேடை அல்லது கப்பல் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய மேற்பார்வை செயற்பாடுகள் அடங்கலானவை. எனினும், அவ்வேலைத்தளம் அல்லது கருத்திட்டம் அல்லது அதன் செயற்பாடுகள் 12 மாத எல்லையினுள் மொத்தமாக 183 நாட்களுக்கு மேல் தொடருமாயின் மாத்திரம்;*

*(ஆ) ஒரு தொழில் முயற்சியானது ஆலோசனை நோக்கங்களுக்காக ஊழியர்களை அல்லது வேறு ஆளணியினரைப் பயன்படுத்தி அச்சேவை அடங்கலான சேவைகளை வழங்குதல். எனினும், அத்தகைய தன்மையினைக் கொண்ட செயற்பாடுகள் (அத்தகைய அல்லது அதனுடன் தொடர்புடைய கருத்திட்டம் ஒன்றிற்கு) ஏதேனும் பன்னிரண்டு மாத கால எல்லையினுள் மொத்தமாக 183 நாட்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் அல்லது காலப்பகுதிகளில் தொடருமாயின் மாத்திரம்.*

4. எவ்வாறாயினும் இவ் உறுப்புரையில் முன்னர் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை 'நிரந்தர தாபனம்' எனும் பதத்திற்கு பின்வருவனவற்றினை உள்ளடக்குதல் கூடாது:

(அ) தொழில் முயற்சியொன்றுக்குரிய பொருட்களை அல்லது வணிகப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தும் அல்லது காட்சிப்படுத்தும் நோக்கத்திற்காக மட்டும் வசதிகளைப் பயன்படுத்துதல்;

(ஆ) களஞ்சியப்படுத்துதல் மற்றும் காட்சிப்படுத்துதல் நோக்கத்திற்காக மாத்திரம் தொழில் முயற்சியொன்றுக்குச் சொந்தமான பொருட்களின் அல்லது வணிகப் பொருட்களின் கையிருப்பு ஒன்றினைப் பேணுதல்;

(இ) வேறொரு தொழில் முயற்சியின் தயாரிப்பு நோக்கத்திற்காக மாத்திரம் தொழில் முயற்சியொன்றுக்குரிய பொருட்களின் அல்லது வணிகப் பொருட்களின் கையிருப்பு ஒன்றினைப் பேணுதல்;

(ஈ) தொழில் முயற்சியொன்றுக்கான பொருட்களை அல்லது வணிகப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக அல்லது தகவல்களைச் சேகரிப்பதற்காக மாத்திரம் நிலையான வியாபாரமொன்றினைப் பேணுதல்;

(உ) தொழில் முயற்சியொன்றுக்கான பூர்வாங்க அல்லது துணைத்தன்மையினைக் கொண்ட வேறு ஏதேனும் செயற்பாட்டை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக மாத்திரம் நிலையான வியாபார நிலையமொன்றினைப் பேணுதல்.

(ஊ) தொழில் முயற்சியொன்றுக்கான பூர்வாங்க அல்லது துணைத்தன்மையினைக் கொண்ட வேறு ஏதேனும் செயற்பாட்டை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக மாத்திரம் மேலே (அ) தொடக்கம் (உ) வரையான உப பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளின் சேர்க்கையின் மூலம் வியாபார நிலையமொன்றைப் பேணுதல்.

5. எவ்வாறாயினும் 7 ஆம் பந்தி ஏற்புடையதாகும் சுதந்திர நிலையிலுள்ள முகவரொருவரைத் தவிர, எவரேனும் ஆளொருவர் ஒப்பந்த அரசு ஒன்றில் மற்றைய ஒப்பந்த அரசின் தொழில் முயற்சியொன்றுக்காகச் செயற்படுகின்ற சந்தர்ப்பத்தில், 1 ஆம் 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் அவ் ஆள் தொழில் முயற்சியின் சார்பில் பொறுப்பேற்கும் ஏதேனும் செயற்பாடுகள் தொடர்பில் அத்தொழில் முயற்சிக்கு முதலில் குறிப்பிட்ட ஒப்பந்த அரசில் நிரந்தர தாபனம் ஒன்று காணப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(அ) அவ் ஆளின் செய்ற்பாடுகள் 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குள் வரையறுக்கப்பட்டதாகவும், நிரந்தர தாபனம் ஒன்றின் ஊடாக மேற்கொள்ளப்படுமாயின், அந்நிரந்தர வியாபார நிலையம் அப் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் நிரந்தர தாபனம் ஒன்றாக கருதப்படாததுமான செயற்பாடாக இருந்தாலேயன்றி, தொழில் முயற்சியின் சார்பில் ஒப்பந்தங்களைச் செய்வதற்கு அதிகாரம் பெற்ற அவ் ஒப்பந்த அரசில் அவ் அதிகாரத்தை ஒரு வழக்கமாக செயற்படுத்தக் கூடிய ஆளொருவராக; அல்லது

(ஆ) அவ்வாறான அதிகாரம் இல்லாதவிடத்தும், முதலில் குறிப்பிடப்பட்ட அரசில் வழக்கமான முறையில் கொண்டு நடாத்துகின்ற அத்தொழில் முயற்சிக்குச் சொந்தமான பொருட்கள் அல்லது வணிகப் பொருள் கையிருப்பு ஒன்றின் மூலம் தொழில் முயற்சியின் சார்பில் பொருட்கள் அல்லது வணிகப் பொருட்களை விநியோகிக்கின்ற ஆளொருவராக;

6. எவ்வாறாயினும் இவ் உறுப்புரையில் மேலே குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள், ஒப்பந்த நாட்டின் காப்புறுதி நிறுவனம் ஒன்றுக்கு மறு காப்புறுதி தவிர்ந்து 7 ஆம் பந்தி ஏற்புடையதாகும் சுதந்திர நிலையிலுள்ள முகவர் ஒருவரைத் தவிர, வேறு ஆளொருவர் ஊடாக மற்றைய ஒப்பந்த அரசின் நிலப் பிரதேசத்தினுள் தவணைப் பணம் சேகரிக்கும் அல்லது அப்பிரதேசத்தினுள் காணப்படும் இழப்பு அபாயங்களைக் காப்புறுதி செய்யுமாயின், அத்தாபனமானது மற்றைய ஒப்பந்த அரசில் நிரந்தர தாபனம் ஒன்றைக் கொண்டுள்ளது எனக் கருதப்படுதல் வேண்டும்.

7. ஒப்பந்த நாட்டின் நிறுவனமொன்று மேற்குறித்த சாதாரண நடைமுறைகளுக்கு இணங்கச் செயற்படும் தரகர் ஒருவர் சாதாரண தரகு முகவர் அல்லது சுயாதீன நிலையினைக் கொண்ட வேறு எவரேனும் முகவர் ஒருவரினூடாக மற்றைய ஒப்பந்த அரசு ஒன்றில் வியாபாரச் செயற்பாடுகளை மேற்கொள்கின்ற காரணத்தினால் மாத்திரம் அவ் அரசினுள் மற்றைய ஒப்பந்த அரசின் நிரந்தரத் தாபனம் ஒன்று காணப்படுவதாகக் கருதக் கூடாது. எவ்வாறாயினும், அத்தகைய முகவர் ஒருவரின் செயற்பாடுகள் அத்தொழில் முயற்சியின் சார்பில் முழுமையாக அல்லது பிரதானமாக அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளப்படுகின்ற போது இப்பந்தியின் கருத்தினுள் அவர் சுதந்திரமான முகவர் எனக் கருதப்படக் கூடாது.

8. ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் கம்பனியொன்று மற்றைய ஒப்பந்த அரசில் வதியும் கம்பனியொன்றினை நிருவகித்தல் அல்லது அத்தகைய கம்பனியொன்றினால் நிருவகிக்கப்படுதல் (நிரந்தர தாபனம் ஒன்றினூடாக அல்லது வேறு ஏதேனும் ஒரு முறையில்) அல்லது மற்றைய ஒப்பந்த அரசில் வியாபாரத்தினை மேற்கொள்வதனால் மாத்திரம் ஒரு கம்பனி மற்றையதன் நிரந்தர தாபனமாக அமையமாட்டாது.

*உறுப்புரை 6*

**அசையா ஆதனங்களிலிருந்து கிடைக்கும் வருமானம்**

1. ஒப்பந்த அரசு ஒன்றில் வதிபவர் ஒருவருக்கு மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள (விவசாயம் அல்லது வனவியல் மூலமாகக் கிடைக்கும் வருமானம் அடங்கலாக) அசையா ஆதனங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் மீது மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்பட முடியும்.

2. "அசையா ஆதனங்கள்" எனும் பதம் குறித்த ஆதனம் அமைந்துள்ள அரசின் சட்டத்தின் கீழ் அப்பதம் கொண்டுள்ள கருத்திலேயே காணப்படுதல் வேண்டும். எத்தகைய சந்தர்ப்பத்திலும் இப்பதம் அசையா ஆதனங்களில் அடங்கும் துணை ஆதனங்கள், கால்நடைகள் மற்றும் விவசாயத்தின் (மீன் வளர்ப்பு மற்றும் அதன் இனப்பெருக்கம் உள்ளடங்களாக) போதும் காடாக்கத்தின் போதும் பயன்படுத்தப்படும் உபகரணங்கள், காணிகள் மற்றும் சொத்துகள் தொடர்பில் சாதாரண சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகும். உரிமைகள், அசையா ஆதனங்களின் ஆட்சியுரிமை, கனிப்பொருட் படிமங்கள், மூலங்கள் மற்றும் ஏனைய இயற்கை வளங்கள் தொடர்பில் வேலை செய்வதற்கு அல்லது வேலை செய்வதற்கான உரிமைக்கான மாற்றமடையக் கூடிய அல்லது நிலையான கொடுப்பனவினைப் பெறுவதற்கான உரிமை என்பன உள்ளடக்கப்படுதல் வேண்டும். அத்துடன் கப்பல்கள் மற்றும் விமானங்கள் என்பன அசையா ஆதனங்களாகக் கருதப்படுதல் கூடாது.

3. அசையா ஆதனங்களை நேரடியாகப் பயன்படுத்துதல், வாடகைக்கு விடுதல் அல்லது வேறு ஏதேனும் முறையில் பயன்படுத்துதல் என்பனவற்றின் மூலம் கிடைக்கும் வருமானங்களுக்கும் இவ் உறுப்புரையின் 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல் வேண்டும்.

4. 1 ஆம் 3 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் ஏதேனும் தொழில்முயற்சிகளின் அசையா ஆதனங்களிலிருந்து கிடைக்கும் வருமானங்களுக்கும், சுதந்திர தனிப்பட்ட சேவைகளை மேற்கொண்டு பயன்படுத்தும் அசையா ஆதனங்களிலிருந்து கிடைக்கும் வருமானங்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

*உறுப்புரை 7*

**வியாபார இலாபங்கள்**

1. ஒப்பந்த அரசு ஒன்றின் தொழில் முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிரந்தர தாபனம் ஒன்றினூடாக மற்றைய ஒப்பந்த அரசில் வியாபாரச் செயற்பாடுகளை மேற்கொள்வதாயின் மாத்திரமே அவ் ஒப்பந்த அரசினால் அத்தொழில் முயற்சியின் இலாபங்கள் மீது வரி விதிப்புச் செய்ய முடியும். தொழில்முயற்சியை மேலே குறிப்பிட்டுள்ளவாறு மேற்கொள்வதாயின் தொழில் முயற்சியின் இலாபங்கள் மீது பின்வரும் காரணங்களினால் மாத்திரமே மற்றைய அரசினால் வரி விதிக்க முடியும்.

   (அ) அது நிரந்தர தாபனமாகவிருத்தல் வேண்டும்.

   (ஆ) அந்நிரந்தர தாபனத்தினூடாக விற்பனை செய்யும் பொருட்கள் அல்லது சரக்குகள் மற்றைய ஒப்பந்த நாட்டின் விற்பனை செய்யும் பொருட்களுக்கு ஒத்த அல்லது ஒத்த வகையினதாக இருத்தல் ; அல்லது

   (இ) மற்றைய ஒப்பந்த அரசின் தாபனத்தினால் முன்னெடுக்கப்படும் வியாபார நடவடிக்கைகளுக்கு சமமானதாக அல்லது இணையானதாக இருத்தல் வேண்டும்.

2. 3 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைய ஒப்பந்த அரசு ஒன்றில் தொழில் முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிரந்தர தாபனமொன்றினூடாக அம் மற்றைய ஒப்பந்த அரசில் அதன் வியாபாரத்தைக் கொண்டு நடாத்துகின்ற சந்தர்ப்பத்தில் அந்நிரந்தரத் தாபனம் எவ்வகையான தொழில் முயற்சியாக இருப்பினும் அத்தொழில் முயற்சியுடன் அந்நிலைமை அல்லது அதற்குச் சமமான நிலைகளின் கீழ் அச்செயற்பாடுகளுக்கு அல்லது அதற்குச் சமமான செயற்பாடுகளில் பூரணமாக, சுதந்திரமாக ஈடுபடுகின்ற வேறுபட்ட அல்லது தனியான தொழில் முயற்சியொன்று காணப்படுமாயின் அதற்கு கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியுமான இலாபங்கள் அந்நிரந்தர தாபனங்களுக்கு கிடைத்ததாக ஒவ்வொரு ஒப்பந்த அரசிலும் கருதப்படுதல் வேண்டும்.

3. எவ்வாறாயினும் உறுப்புரை 24 இன் ஏற்பாடுகள் நிரந்தரத் தாபனமொன்றின் இலாபத்தைத் தீர்மானிக்கும் போது நிறைவேற்று மற்றும் பொது நிருவாக செலவுகள் உள்ளிட்ட அந்நிரந்தரத் தாபனத்தின் வியாபாரச் செயற்பாடுகளுக்காக உறப்பட்ட செலவுகளை அவை அந்நிரந்தர தாபனம் அமைந்துள்ள அரசில் அல்லது பிறிதொரு இடத்தில் மேற்கொள்ளப்பட்டதாக இருப்பினும் ஒப்பந்த அரசின் வரிச்சட்டத்தின் எல்லைக்குட்பட்டு அவற்றைக் கழிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், நிரந்தரத் தாபனமொன்றினால் தொழில் முயற்சியின் பிரதான காரியாலயத்திற்கு அல்லது அதன் வேறு காரியாலயத்திற்கு (உண்மையான செலவீனங்களுக்காக மீளக் கொடுக்கப்பட்டது), வேத்துரிமைகளுக்கு, காப்புரிமை அல்லது வேறு உரிமங்களுக்கு ஒப்பானவைகளுக்கான கொடுப்பனவுகளுக்கு, முகாமைவத்துவத்திற்காக நிகழ்த்தப்பட்ட வேறு சேவைகளுக்கான தரகுப் பணம், நிரந்தரத் தாபனத்தின் தொழில் முயற்சிகளுக்கான வங்கி நடவடிக்கைகளுக்கான வட்டி போன்றவற்றிற்காக எந்த ஒரு தொகையையும் கழிப்பதற்கு அனுமதி வழங்கப்பட முடியாது. அதேபோன்று, நிரந்தரத் தாபனத்தின் இலாபத்தைத் தீர்மானிக்கும் கணக்குகள் தொடர்பாக நிரந்தரத் தாபனமொன்றினால் (உண்மையான செலவீனங்களுக்காகக் கொடுக்கப்பட்டது) தொழில் முயற்சியின் பிரதான காரியாலயத்திற்கு அல்லது அதன் வேறு காரியாலயத்திற்கு, வேத்துரிமைகளுக்கு, காப்புரிமை அல்லது வேறு உரிமங்களுக்கு ஒப்பானவைகளுக்கான கொடுப்பனவுகளுக்கு, முகாமைத்துவத்திற்காக நிகழ்த்தப்பட்ட வேறு சேவைகளுக்கான தரகுப் பணம், நிரந்தரத் தாபனத்தின் தொழில் முயற்சிகளுக்கான பிரதான காரியாலயம் அல்லது வேறு காரியாலயத்தின் வங்கி நடவடிக்கைகளுக்கான வட்டி போன்றவற்றிற்காக எந்த ஒரு தொகையையும் கழிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

4. மொத்த இலாபத்தினை அதன் வெவ்வேறு பகுதிகளுக்கு பகிர்ந்தளிக்கும் அடிப்படையில் நிரந்தர தாபனத்திற்கான இலாபத்தினைத் தீர்மானிப்பது, ஒப்பந்த அரசு ஒன்றில் வழக்காறாக இருக்கும் பட்சத்தில் இவ் உறுப்புரையின் (2) ஆம் பந்தியில் கூறப்பட்ட எவையும், வழக்காற்றின்படி அத்தகைய பகிர்ந்தளிப்பினூடாக வரி அறவிடக் கூடிய இலாபத்தினைத் தீர்மானிப்பதற்கு ஒப்பந்த அரசினை தடுத்தலாகாது. எனினும், பின்பற்றப்படும் பகிர்வு முறை இவ் உறுப்புரையில் உள்ளடங்கியுள்ள கொள்கைகளுக்கு இணங்கியதாக இருத்தல் வேண்டும்.

5. மேலே கூறப்பட்ட பந்திகளின் நோக்கங்களுக்காக அந்நிரந்தரத் தாபனத்துக்கு சேரவேண்டிய இலாபமானது அவ்வாறு செய்யாதிருப்பதற்குப் பொருத்தமான, போதியளவு காரணிகள் அந்நாட்டிற்கு இருந்தாலன்றி வருடா வருடம் ஒரே முறையினூடாகத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

6. இவ் ஒப்பந்தத்தின் ஏனைய உறுப்புரைகளினால் பிரத்தியேகமாகக் கையாளப்படும் வருமான வகைகள் இவ் இலாபங்களில் உள்ளடக்கப்படும் சந்தர்ப்பங்களில் அவ் உறுப்புரைகளின் ஏற்பாடுகள் மீது இவ் உறுப்புரையின் ஏற்பாடுகள் தாக்கம் செலுத்தக் கூடாது.

*உறுப்புரை 8*

**கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து**

1. ஒப்பந்த அரசு ஒன்றில் மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள தொழில்முயற்சியொன்று சர்வதேசப் போக்குவரத்தில் கப்பல் தொழிற்பாட்டின் மூலம் இலாபமீட்டுமாயின் முதலில் குறிப்பிடப்பட்ட அரசில் வரி அறவிட முடியுமாயினும், அவ்வாறு அறவிடப்படும் வரியை 50 வீதத்திற்குச் சமமான அளவினால் குறைத்தல் வேண்டும்.

2. சர்வதேசப் போக்குவரத்தில் விமானங்களை இயக்குவதில் ஒப்பந்த அரசின் தொழில்முயற்சிக்கு கிடைக்கும் இலாபத்திற்கான வரியை அவ் ஒப்பந்த அரசினால் மாத்திரமே அறவிட முடியும்.

3. தொழில் முயற்சியொன்றினால் சர்வதேசப் போக்குவரத்தில் கப்பல் மற்றும் விமானங்களை இயக்குவதனால் ஈட்டும் இலாபம் தொடர்பான இவ்வுறுப்புரையின் நோக்கம் பின்வருவனவற்றை உள்ளடக்கியது :

(அ) சர்வதேசப் போக்குவரத்தில் செயற்படும் கப்பல்கள் அல்லது விமானங்களின் பட்டயம், குத்தகை அல்லது வாடகை இடைநேர்விளைவாகக் காணப்படுமிடத்து, அக்கப்பல் அல்லது விமானத்தின் வெற்றுக்கப்பல் பட்டயம் அடிப்படையிலான பட்டயம், குத்தகை அல்லது வாடகை ;

(ஆ) சர்வதேசப் போக்குவரத்தில் செயற்படும் கப்பல்கள் அல்லது விமானங்களின் கொள்கலன்களின் பயன்பாடு, பராமரிப்பு அல்லது வாடகை இடைநேர்விளைவாகக் காணப்படுமிடத்து, அக்கொள்கலனின் பயன்பாடு, பராமரிப்பு அல்லது வாடகை;

4. 1 ஆம் 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளானது ஏதேனும் குழாத்துடன், ஒரு கூட்டு வியாபாரத்துடன் அல்லது ஒரு சர்வதேச தொழிற்பாட்டு முகவர் நிறுவனத்துடன் பங்கேற்பதன் மூலம் கிடைக்கும் இலாபங்கள் தொடர்பிலும் ஏற்புடையதாகும்.

5. சர்வதேசப் போக்குவரத்தில் விமானங்களை இயக்குவதிலிருந்து கிடைக்கும் இலாபங்கள் மீது அவ்விமானப் போக்குவரத்தினை நடாத்துகின்ற தொழில் முயற்சியில் ஒப்பந்த அரசினால் சர்வதேசப் போக்குவரத்தில் விமானங்களை இயக்கும் தொழில் முயற்சியில் பெறப்பட்ட இலாபங்கள் மீது இரட்டை வரி விதிப்பைத் தவிர்ப்பதற்காக 1994, யூலை 26 ஆந் திகதி ஓமான் சுல்த்தான் இராச்சிய அரசிற்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் உள்ளது.

*உறுப்புரை 9*

**கூட்டிணைந்த வியாபார முயற்சிகள்**

(அ) ஒப்பந்த அரசொன்றிலுள்ள வியாபார முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசிலுள்ள வியாபார முயற்சியொன்றின் முகாமைத்துவம், கட்டுப்பாடு அல்லது மூலதனம் தொடர்பில் நேரடியாக அல்லது மறைமுகமாகப் பங்கேற்கும் அல்லது

(ஆ) ஒரே நபர்கள் ஒப்பந்த அரசு ஒன்றின் வியாபார முயற்சியொன்றினதும் மற்றைய ஒப்பந்த அரசின் வியாபார முயற்சியொன்றினதும் முகாமைத்துவம், கட்டுப்பாடு அல்லது மூலதனம் என்பவற்றில் நேரடியாக அல்லது மறைமுகமாகப் பங்கேற்கும் சந்தர்ப்பத்தில்.

மற்றும் அச்சந்தர்ப்பத்தில் இரண்டிலும் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் சுதந்திர வியாபார முயற்சிகளுக்கிடையில் நடைபெறும் வணிக மற்றும் நிதித் தொடர்புகள் பற்றிய நிபந்தனைகளுக்கு மாற்றமான நிபந்தனைகள் அவ்வியாபார முயற்சிகள் இரண்டுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அல்லது விதிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், அந்நிபந்தனைகள் காணப்படாவிட்டால் அவ்வியாபார முயற்சிகளில் ஒன்றுக்குச் சேரக்கூடிய எனினும், அந்நிபந்தனையின் காரணமாக அவ்வாறு சேராத ஏதேனும் இலாபங்கள் இருப்பின் அவற்றை வியாபார முயற்சியின் இலாபங்களில் உள்ளடக்கி அதற்கிணங்க இலாபங்கள் மீது வரி அறவிடப்பட முடியும்.

2. ஒப்பந்த அரசொன்று 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைய அந்த ஒப்பந்த அரசின் வியாபார முயற்சியொன்றின் இலாபங்களை உள்ளடக்கி - அதற்கமைய வரி விதித்திருப்பின் - அத்துடன் மற்றைய ஒப்பந்த அரசின் வியாபார முயற்சியின் இலாபங்களில் மற்றைய ஒப்பந்த அரசு வரி விதித்துமிருப்பின் - உள்ளடக்கப்பட்ட இலாபங்களானது, சுதந்திர வியாபார முயற்சிகளுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் போன்று இவ்விரு வியாபார முயற்சிகளுக்கிடையே நிபந்தனைகள் காணப்பட்டு முதல் குறிப்பிட்ட ஒப்பந்த அரசின் வியாபார முயற்சியின் திரட்டிய இலாபத்தைக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அந்த மற்றைய ஒப்பந்த நாடானது அது விதித்துள்ள வரியில் செம்மையாக்கல் ஒன்றினை அச்செம்மையாக்கல் நியாயமானது எனும் சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும். அத்தகைய செம்மையாக்கல்களை நிர்ணயிக்கின்றபோது, இவ் ஒப்பந்தத்தின் மற்றைய ஏற்பாடுகள் தொடர்பிலும் உரிய கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அவசியமாயின் ஒப்பந்த அரசுகளின் தகவுடைய அதிகாரிகள் தமக்குள் கலந்தாலோசித்தலும் வேண்டும்.

3. வரி மோசடி, கவனயீனம் அல்லது தெரிந்து கொண்டே மேற்கொண்ட தவறுகள் என்பனவற்றுடன் தொடர்புடைய தண்டப் பணத்தினைச் செலுத்துவது தொடர்பில் கவனத்தில் கொள்ளப்பட்ட இவ்வியாபார முயற்சிகளில் ஒன்று, 1 ஆம் பந்தியின் கீழான இலாப சீராக்கலுக்கு சட்ட, நிருவாக அல்லது ஏனைய சட்ட நடைமுறைகளூடாக இறுதித் தீர்ப்பினைப் பெறுபேறாகப் பெற்று இருக்குமிடத்து 2 ஆம் பந்தியிலுள்ள ஏற்பாடுகள் ஏற்டையதாக மாட்டாது.

*உறுப்புரை 10*

**பங்கிலாபங்கள்**

1. ஒப்பந்த அரசொன்றில் வதியும் கம்பனியொன்றினால் மற்றைய ஒப்பந்த அரசில் வதியும் ஒருவருக்குச் செலுத்தப்படுகின்ற பங்கிலாபங்கள் மீது அம் மற்றைய அரசில் வரி விதிக்கப்பட முடியும்.

2. எவ்வாறாயினும், பங்கிலாபங்களைச் செலுத்துகின்ற கம்பனி வதியும் ஒப்பந்த அரசிலும் அவ் அரசின் சட்டங்களுக்கு இணங்கும் வகையில் அத்தகைய இலாபங்களிலிருந்து வரி அறவிட முடியுமாயினும், அப்பங்கிலாபத்தைப் பெறுபவர் மற்றைய ஒப்பந்த அரசில் வதிபவராக இருப்பின் அறவிடும் வரியானது மொத்த பங்கிலாபத்தில்;

(அ) நன்மை பெறுபவர் கம்பனியாக இருந்து, பங்கிலாபத்தினைச் செலுத்தும் கம்பனியின் மூலதனத்தில் குறைந்தபட்சம் பத்து வீதத்தை (10%) நேரடியாக வைத்திருக்கும் கம்பனியாக (பங்குடமை தவிர்ந்த) இருக்கும் சந்தர்ப்பத்தில் பங்கிலாபத்தின் மொத்த தொகையில் ஏழரை சதவீதம் (7.5%)

(ஆ) ஏனைய அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் மொத்த தொகையின் 10 சதவிகிதமாகும்.

இப்பந்தியின் ஏற்பாடுகள், பங்கிலாபங்கள் செலுத்தப்படுகின்ற இலாபங்கள் தொடர்பில் கம்பனியிடமிருந்து வரி அறவிடுதலில் தாக்கம் செலுத்தக் கூடாது.

3. இவ் உறுப்புரையில் பயன்படுத்தப்பட்டுள்ள “பங்கிலாபங்கள்” என்ற பதம், பங்குகள் மூலம் கிடைக்கும் வருமானங்களையும், கடன் உரிமைக் கோரிக்கைகள் அல்லாத வேறு உரிமைகளிலிருந்து அல்லது இலாபத்தில் பங்கேற்றல் மூலம் கிடைக்கும் வருமானங்களையும் இலாபங்களைப் பகிர்ந்தளிக்கின்ற கம்பனியொன்று வதியும் ஒப்பந்த அரசின் சட்டங்கள் மூலம் பங்குகளிலிருந்து கிடைக்கும் வருமானம் வரி விதிப்புக்குள்ளாக்கப்படும் முறையில் வரி விதிப்புக்குள்ளாகும் போது நியதிச்சட்ட உரிமைகள் ஊடாக கிடைக்கும் வருமானத்தினையும் குறிக்கும்.

4. பங்கிலாபங்களின் பயனுரிமையாளர் ஒப்பந்த அரசு ஒன்றில் வதிபவராக இருந்து மற்றைய ஒப்பந்த அரசில் பங்கிலாபங்களைச் செலுத்தி வியாபாரச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக வசிப்பிட அடிப்படையில் அங்கு அமைந்துள்ள நிரந்தர தாபனத்தினூடாக சுதந்திரமான தனிப்பட்ட சேவை ஒன்றினை அம்மற்றைய ஒப்பந்த அரசினுள் மேற்கொண்டு பங்கிலாபங்களைச் செலுத்துகின்ற நிலையான அடிப்படையுடைய அந்நிரந்தரத் தாபனத்துடன் பயனுறுதிமிக்க முறையில் தொடர்புகளை ஏற்படுத்தி நிறுவப்பட்ட ஒரு கம்பனியாயின் 1 ஆம் 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகமாட்டா. அத்தகைய சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற வகையில் இவ் ஒப்பந்தத்தின் 7 ஆம் உறுப்புரை அல்லது 14 ஆம் உறுப்புரை ஏற்புடையதாகும்.

5. ஒப்பந்த அரசில் வதியும் கம்பனியொன்று மற்றைய ஒப்பந்த அரசில் இலாபம் அல்லது வருமானம் உழைக்கும் சந்தர்ப்பத்தில் அக்கம்பனி செலுத்தும் பங்கிலாபங்கள் மற்றைய அரசில் வதியும் ஒருவருக்குச் செலுத்தப்படும்போது அல்லது அம்மற்றைய அரசில் அமைந்துள்ள பயனுறுதிமிக்க முறையில் தொடர்புபட்டுள்ள நிரந்தர தாபனம் ஒன்றுடன் அல்லது நிரந்தர அடிப்படை ஒன்றுடன் தொடர்பானதாக உள்ளவிடத்து தவிர, கம்பனியால் செலுத்தப்படுகின்ற பங்கிலாபங்கள் தொடர்பில் எந்தவொரு வரியும் அம்மற்றைய ஒப்பந்த அரசினால் விதிக்கப்படாது இருக்கும் வரை கம்பனியினால் செலுத்தப்படும் பங்கிலாபங்கள் அல்லது பகிரப்படாத இலாபங்கள் அம்மற்றைய அரசில் எழும் இலாபங்களில் அல்லது வருமானங்களில் மொத்தமாக அல்லது பகுதியாக உள்ளடங்கியிருப்பினும் கம்பனியின் பகிரப்படாத இலாபங்கள் மீதான வரியில் உட்படாதிருக்கவும் முடியும்.

6. பங்கிலாபம் செலுத்தப்படும் பங்குகள் அல்லது ஏனைய உரிமைகள் தொடர்பிலான உருவாக்கம் அல்லது நிர்ணயம் மூலம் இவ் உறுப்புரையை சாதகமாக பயன்படுத்துவதை எவரேனும் நபரொருவர் பிரதான நோக்காக அல்லது பிரதான நோக்கங்களில் ஒன்றாகக் கொண்டு அவற்றினை உருவாக்கி அல்லது நிர்ணயித்து இருக்கும் சந்தர்ப்பத்தில் இவ் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாக மாட்டாது.

உறுப்புரை 11

**வட்டி வருமானங்கள்**

1. ஒப்பந்த அரசொன்றில் எழுவதும் மற்றைய ஒப்பந்த அரசில் வதியும் ஒருவருக்குச் செலுத்தப்படுவதுமான வட்டியின் மீது அம் மற்றைய அரசில் வரி விதிக்கப்பட முடியும்.

2. எவ்வாறாயினும், அத்தகைய வட்டியின் மீது அது எழும் ஒப்பந்த நாட்டிலும் அந்நாட்டின் சட்டங்களுக்கு இணங்க வரி விதிக்கப்பட முடியுமாயினும் வட்டியின் பயனுரிமையாளர் மற்றைய ஒப்பந்த அரசில் வதிபவராக இருப்பின் அவ்வாறு அறவிடப்படும் வரியின் அளவு மொத்த வட்டித் தொகையின் 10 சதவீதத்தினை விட விஞ்சுதல் கூடாது.

3. 2 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு பங்கம் ஏற்படாத வகையில், ஒரு ஒப்பந்த அரசில் எழும் வட்டியை மற்றைய ஒப்பந்த அரசின் அரசாங்கத்துக்கு செலுத்தும்போது, முதல் குறிப்பிட்ட ஒப்பந்த அரசிலிருந்து வரியானது விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

4. 3 ஆம் பந்தியின் நோக்கங்களுக்காக அரசாங்கம் என்பது:

(அ) இலங்கை விடயத்தில்:

(i) இலங்கை மத்திய வங்கி;
(ii) ஒப்பந்த அரசுகளின் அதிகாரிகளினால் காலத்திற்குக் காலம் ஏற்றுக்கொள்ளக்கூடிய இலங்கை அரசாங்கத்தினால் முழுமையாக உரிமையாக்கப்பட்ட மூலதனத்தினைக் கொண்ட ஏதேனும் வேறு நிதி நிறுவத்தினை அல்லது நியதிச் சட்ட அமைப்பினைக் குறிக்கின்றது.

(ஆ) நிர்வகிக்கப்படும் ஓமான் விடயத்தில்:

(i) ஓமான் மத்திய வங்கி;

(ii) அரச பொது காப்பு நிதியம்;

(iii) ஓமான் முதலீட்டு நிதியம் மற்றும்;

(iv) ஒப்பந்த அரசுகளின் அதிகாரிகளினால் காலத்திற்குக் காலம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓமானிய அரசாங்கத்தினால் முழுமையாக உரிமையாக்கப்பட்ட மூலதனத்தினைக் கொண்ட ஏதேனும் வேறு நிதி நிறுவனத்தினை அல்லது நியதிச்சட்ட அமைப்பினைக் குறிக்கின்றது.

5. இவ் உறுப்புரையில் பயன்படுத்தப்பட்டுள்ளது போன்று 'வட்டி' என்ற வாசகம், ஈட்டுப் பொருள் ஒன்றை அடகாக வைத்துப் பெறப்பட்ட அல்லது அவ்வாறு அடகு வைக்காது பெறப்பட்ட கடன்காரரின் இலாபத்தில் பங்கு கொள்ளும் உரிமையைக் கொண்ட அல்லது அவ் உரிமையினைக் கொண்டிராத அனைத்து வகையான கடன் உரிமைகள் மூலமும் கிடைக்கின்ற வருமானங்களையும் குறிப்பாக அரசாங்க பிணையங்களிலிருந்து கிடைக்கின்ற வருமானங்களையும் பிணையங்கள், முறிகள் அல்லது தொகுதிக் கடன்களுடன் இணைந்துள்ள வெகுமதிகள் மற்றும் பரிசுகள் அடங்கலாக முறிகள் அல்லது தொகுதிக் கடன்களிலிருந்து கிடைக்கின்ற வருமானங்களையும் குறிக்கும். இவ் உறுப்புரையின் நோக்கங்களுக்காக தாமதித்துச் செலுத்தப்படும் கொடுப்பனவுகளுக்கான தண்டப் பணம் வட்டியாக கருதப்படக் கூடாது.

6. ஒப்பந்த அரசு ஒன்றில் வதிபவரான வட்டியின் பயனுரிமையாளர், வட்டி எழும் மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிரந்தர தாபனம் ஒன்றினூடாக வியாபாரச் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துபவராயின், அல்லது அங்கு அமைந்துள்ள நிலையான அடிப்படை ஒன்றின் மூலம் மற்றைய ஒப்பந்த அரசின் உள்ளே சுதந்திரமான தனிப்பட்ட சேவைகளை மேற்கொள்வாராயின், மற்றும் வருமானம் செலுத்தப்படும் கடனுரிமை (அ) அந்நிரந்தர தாபனத்துடன் அல்லது நிரந்தர அடிப்படையுடன் (ஆ) உறுப்புரை 7 இன் 1 ஆம் பந்தியின் (இ) இல் குறிப்பிட்டுள்ளவாறு வர்த்தக தொடர்பினைக் கொண்டிருப்பின் 1 ஆம் 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகமாட்டா. அத்தகைய சந்தர்ப்பங்களில் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப இவ் ஒப்பந்தத்தின் 7 ஆம் அல்லது 14 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல் வேண்டும்.

7. வட்டி செலுத்துபவர் அவ் அரசில் வதியும் ஒருவராக இருக்குமிடத்து வட்டியானது அவ் ஒப்பந்த அரசில் எழுவதாக கருதப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், வட்டி செலுத்துபவர் ஒப்பந்த அரசு ஒன்றில் வதிபவராக இருப்பினும் இல்லாவிடினும் அவருக்கு வருமானத்தைச் செலுத்துவதற்கு அல்லது சேர்வதற்குரிய கடன் பெறுதன்மை தொடர்புடைய நிரந்தர தாபனம் ஒன்று அல்லது நிலையான அடிப்படை ஒன்று ஓர் ஒப்பந்த நாட்டில் அமைந்திருப்பதுடன் அத்தகைய நிரந்தர தாபனத்தினால் அல்லது நிலையான அடிப்படையினால் அத்தகைய வட்டி பெறப்படுமாயின் அத்தகைய வட்டியானது அமைந்துள்ள அவ் ஒப்பந்த அரசில் எழுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

8. செலுத்துநருக்கும் பயனுரிமையாளருக்குமிடையில் அல்லது அவர்கள் இருவருக்கும் வேறு எவரேனும் ஆளொருவருக்கும் இடையில் காணப்படும் விசேட தொடர்பு ஒன்றின் காரணமாகச் செலுத்தப்படும் வருமானத்தின் அளவு, அது செலுத்துப்படும் கடனுரிமையைக் கவனத்திற் கொண்டு அத்தகைய தொடர்பு காணப்படாத சந்தர்ப்பத்தில் செலுத்துபவர் பயனுரிமையைக் கொண்டுள்ள ஆள் ஆகிய இருவரும் உடன்பட்டிருக்க முடியுமான அளவைவிட விஞ்சுமாயின், இறுதியாகக் குறிப்பிட்ட அளவின் மீது மாத்திரமே இவ் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில் கொடுப்பனவுகளின் மேலதிகப் பகுதி மீது இவ் ஒப்பந்தத்தின் மற்றைய ஏற்பாடுகளைப் பொருத்தமான முறையில் கவனத்தில் எடுத்து ஒவ்வொரு ஒப்பந்த அரசினதும் சட்டத்திற்கிணங்க மேலும் வரிகள் விதிக்கப்பட முடியும்.

9. இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகள் ஓர் நபரைக் கருதுமிடத்து இவ்வுறுப்புரையின் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்காகச் செலுத்தப்படும் வட்டி தொடர்பிலான பற்று அல்லது கூற்று தொடர்பான உருவாக்கம் அல்லது நிர்ணயம் தொடர்பிலான பிரதான நோக்கம் அல்லது பிரதான நோக்கங்களில் ஒன்று குறித்து பிரயோகிக்கப்படலாகாது.

*உறுப்புரை 12*

**வேத்துரிமை மற்றும் தொழில்நுட்ப சேவைகளுக்கான கட்டணங்கள்**

1. ஒப்பந்த அரசு ஒன்றில் எழுவதும் மற்றைய ஒப்பந்த அரசில் வதியும் ஒருவருக்கு செலுத்தப்படுவதுமான வேத்துரிமை அல்லது தொழில்நுட்ப சேவைகளுக்கான கட்டணங்கள் மீது அம் மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்பட முடியும்.

*2.* எவ்வாறாயினும், அவ்வேத்துரிமை அல்லது தொழில்நுட்பச் சேவைகளுக்கான கட்டணங்கள் அவை எழும் ஒப்பந்த அரசிலும் அவ் ஒப்பந்த அரசின் சட்டத்திற்கும் இணங்க வரி விதிக்கப்பட முடியும், எனினும், வேத்துரிமையின் அல்லது தொழில்நுட்ப சேவைக் கட்டணங்களின் பயனுரிமையாளர் மற்றைய ஒப்பந்த அரசில் வதிபவராக இருப்பின் அவ்வாறு அறவிடப்படும் வரி அவ்வேத்துரிமையின் அல்லது தொழில்நுட்பச் சேவைக் கட்டணங்களின் மொத்தப் பெறுமானத்தின் 10 வீதத்தினை விட விஞ்சுதல் கூடாது.

*3.* (அ) இவ் உறுப்புரையில் பயன்படுத்தப்பட்டவாறு "வேத்துரிமை" என்ற சொல், வானொலி அல்லது தொலைக்காட்சியில் ஒலி-ஒளி பரப்புவதற்குப் பயன்படும் ஒளிப்பதிவு செய்யப்பட்ட படங்கள் அல்லது ஒலிப்பதிவு நாடாக்கள் உள்ளடங்கலாக இலக்கியம்சார் அல்லது விஞ்ஞானம்சார் வேலையின் பதிப்புரிமையைப் பயன்படுத்தல் அல்லது பயன்படுத்துவதற்கான உரிமை, ஆக்கவுரிமை, வியாபாரக் குறி, வடிவமைப்பு அல்லது மாதிரி, திட்டம் அல்லது இரகசிய சூத்திரம் அல்லது செயன்முறையைப் பயன்படுத்துதல் அல்லது பயன்படுத்துவதற்கான உரிமை, ஏதேனும் கைத்தொழில்சார், வணிகம்சார், விஞ்ஞானம்சார் சாதனத்தைப் பயன்படுத்துதல் அல்லது பயன்படுத்துவதற்கான உரிமை அல்லது கைத்தொழில்சார் அல்லது விஞ்ஞானம்சார் தகவல்களைப் பயன்படுத்தல் அல்லது பயன்படுத்துவதற்கான உரிமை என்பவற்றுக்கு பிரதிபலனாக பெறப்பட்ட ஏதேனும் வகையிலான கொடுப்பனவு எனப் பொருள்படும்.

(ஆ) இவ் உறுப்புரையில் பயன்படுத்தப்பட்டுள்ள "தொழில்நுட்ப சேவைகளுக்கான கட்டணம்" என்ற பதம் இவ் உடன்படிக்கையின் 15 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றினைத் தவிர்ந்த தொழில்நுட்பம் அல்லது வேறு ஆளணியினரின் சேவைகளில் வழங்குகைக்கான கட்டணமொன்று உள்ளடங்கலாக, முகாமைத்துவ, தொழில்நுட்ப அல்லது ஆலோசனைச் சேவைக் கட்டணம் எனப் பொருள்படும்.

(இ) வேத்துரிமை அல்லது தொழில்நுட்ப சேவைக் கட்டண பயனுரிமையாளர் ஒப்பந்த அரசொன்றில் வதிபவராகவும் வேத்துரிமை அல்லது தொழில்நுட்பச் சேவைக் கட்டணம் எழும் மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிரந்தர தாபனம் ஒன்றினூடாக வியாபாரமொன்றினைக் கொண்டு நடாத்துபவராயின் அல்லது மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிலையான அடிப்படையொன்றினூடாக சுதந்திரமான தனிப்பட்ட சேவைகளை மேற்கொள்வதாயின் வேத்துரிமை செலுத்தப்படுவது எவ்வகையான உரிமை அல்லது ஆதனம் தொடர்பிலாயினும் அவ் உரிமை அல்லது அவ் ஆதனம் (அ) அந்நிரந்தரத் தாபனத்துடன் அல்லது நிலையான அடிப்படையுடன் அல்லது (ஆ) உறுப்புரை 7 இன் 1 ஆம் பந்தியின் இ ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு வியாபார நடவடிக்கையுடன் உயிர்ப்பான தொடர்பினைக் கொண்டிருப்பின், இவ் உறுப்புரையின் 1 ஆம் 2 ஆம் பந்திகளிலுள்ள ஏற்பாடுகள் ஏற்புடையதாகக் கூடாது. அத்தகைய சந்தர்ப்பத்தில் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு உறுப்புரை 7அல்லது உறுப்புரை 14 இன் ஏற்பாடுகள் ஏற்புடையதாதல் வேண்டும்.

(ஈ) வேத்துரிமை மற்றும் தொழில்நுட்ப சேவைகள் கட்டணத்தினைச் செலுத்துபவர் அவ் அரசில் வதியும் ஒருவராக இருக்குமிடத்து வேத்துரிமை அல்லது தொழில்நுட்ப சேவைக் கட்டணங்கள் அவ் ஒப்பந்த அரசில் எழுபவையாக கொள்ளப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், வேத்துரிமையைச் செலுத்தும் நபர் ஒப்பந்த அரசொன்றில் வதிபவராக இருப்பினும் இல்லாவிடினும் வேத்துரிமையை அல்லது தொழில்நுட்ப சேவைக் கட்டணங்களை செலுத்தும் பொறுப்புடன் தொடர்புடைய நிரந்தர தாபனம் ஒன்று அல்லது நிலையான அடிப்படையொன்று ஒப்பந்த அரசில் அவருக்குச் சொந்தமாக இருந்து அவ்வேத்துரிமை அல்லது தொழில்நுட்ப சேவைகள் கட்டணங்கள் அந்நிரந்தர தாபனம் அல்லது நிலையான அடிப்படையினால் செலுத்தப்படுமாயின், அச்சந்தர்ப்பத்தில் நிரந்தர தாபனம் அல்லது நிலையான அடிப்படை அமைந்துள்ள ஒப்பந்த அரசில் வேத்துரிமை அல்லது தொழில்நுட்ப சேவைக் கட்டணங்கள் எழுவதாக கருதப்படுதல் வேண்டும்.

(உ) செலுத்துபவருக்கும் பயனுரிமையாளருக்கும் இடையில் அல்லது அவர்கள் இருவருக்கும் வேறு எவரேனும் ஆளொருவருக்குமிடையில் காணப்படும் விசேடமான தொடர்பு காரணமாக பயன்பாடு உரிமை அல்லது தகவல்களைக் கவனத்திற் கொண்டு செலுத்தப்படும் வேத்துரிமை அல்லது தொழில்நுட்ப சேவைகளுக்கான கட்டணங்களின் தொகை, அத்தகைய தொடர்பு ஏதும் இல்லாதவிடத்து செலுத்துபவரும் பெறுபவரும் உடன்பாடு சாத்தியம் கொண்ட தொகையினைவிட விஞ்சுமாயின், இவ் உறுப்புரையின் மற்றைய ஏற்பாடுகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தி அச்சந்தர்ப்பத்தில் கொடுப்பனவுகளில் காணப்படும் மேலதிக தொகை மீது ஒவ்வொரு ஒப்பந்த அரசினதும் சட்டத்திற்கிணங்க வரி விதிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில், அந்தக் கொடுப்பனவின் மேலதிக பகுதி, ஒவ்வொரு ஒப்பந்த நாட்டினதும் சட்டங்களுக்கு அமைய வரி விதிக்கப்படற்பாலதாக இருத்தல் வேண்டும், ஒப்பந்தத்தின் ஏனைய ஏற்பாடுகள் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஊ) இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகள் ஓர் நபரைக் கருதுமிடத்து இவ்வுறுப்புரையின் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்காகச் செலுத்தப்படும் வேத்துரிமை அல்லது தொழில்நுட்ப உதவிகள் தொடர்பிலான உரிமைகள் தொடர்பான உருவாக்கம் அல்லது நிர்ணயம் தொடர்பிலான பிரதான நோக்கம் அல்லது பிரதான நோக்கங்களில் ஒன்று குறித்து பிரயோகிக்கப்பட மாட்டாது.

*உறுப்புரை 13*

**மூலதன ஈட்டங்கள்**

*1.* *ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் ஒருவர், உறுப்புரை 6 இல் குறிப்பிடப்பட்டுள்ளதும் மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ளதுமான அசையா ஆதனங்களை உரிமை மாற்றம் செய்வதனூடாகப் பெற்ற ஈட்டங்கள் மீது அம் மற்றைய அரசில் வரி விதிக்கப்படலாம்.*

*2.* *ஒப்பந்த அரசு ஒன்றின் தொழில்முயற்சி ஒன்றுக்குச் சொந்தமான மற்றைய ஒப்பந்த அரசில் உள்ள நிரந்தர தாபனம் ஒன்றின் வியாபார ஆதனங்களில் ஒரு பகுதியாகவுள்ள அசையும் ஆதனங்களை உரிமை மாற்றம் செய்வதன் மூலம் அல்லது ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் ஒருவருக்கு மற்றைய ஒப்பந்த அரசில் உள்ள நிலையான அடிப்படையுடன் தொடர்புடைய வகையில் சுதந்திரமான தனிப்பட்ட சேவை வழங்கலுக்காகவுள்ள அசையும் ஆதனங்களை உரிமை மாற்றம் செய்வதன் மூலம் கிடைக்கும் ஈட்டங்கள் மீது (அது மாத்திரம் அல்லது முழு தொழில் முயற்சியுடன்) அல்லது அந்நிலையான அடிப்படை உரிமை மாற்றம் செய்வதன் மூலம் கிடைக்கும் ஈட்டங்கள் அடங்கலாக அம்மற்றைய அரசில் வரி விதிக்கப்படலாம்.*

*3.* *சர்வதேசப் போக்குவரத்தில் இயக்கப்படும் கப்பல்கள் அல்லது வானூர்தியுடன் அல்லது அத்தகைய கப்பல்கள் அல்லது வானூர்தியுடன் தொடர்புடைய அசைவுறு ஆதனத்தின் பாராதீனத்தாற் பெறப்படும் ஈட்டங்கள் அத்தொழில் முயற்சியின் பயன்மிக்க முகாமை அமைந்துள்ள ஒப்பந்த அரசில் மட்டுமே வரி விதிக்கப்படலாம்.*

*4.* பெறுமதியில் 75 சதவீதத்தினை விஞ்சிய தொகையொன்று மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்திருக்கும் அசையா ஆதனங்களிலிருந்து நேரடியாக அல்லது மறைமுகமாக கிடைக்கும் பங்குகளைப் பாராதீனப்படுத்துவதன் மூலம் ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் ஒருவர் பெற்றுக் கொள்ளும் ஈட்டங்கள் மீது மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்பட முடியும்.

5. *இவ் உறுப்புரையின் 1,2,3 மற்றும் 4 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்கள் தவிர எந்தவொரு ஆதனத்தையும் பாராதீனப்படுத்துபவதன் மூலம் கிடைக்கும் ஈட்டங்கள் மீது அவ் ஆதனங்களைப் பாராதீனப்படுத்துபவர் வதிபவராகவுள்ள ஒப்பந்த அரசில் மாத்திரம் வரி விதிக்கப்பட வேண்டும்.*

*உறுப்புரை 14*

**சுயாதீன தனிப்பட்ட சேவைகள்**

*1.* *ஒப்பந்த அரசொன்றில் வதிவுள்ளவரான ஆளொருவரினால் உயர் தொழில் சேவைகள் அல்லது சுயாதீன முறையிலான வேறு* செயற்பாடுகள் சார்பில் பெறப்படும் வருமானம் பின்வரும் சந்தர்ப்பங்களைத் தவிர அதே அரசில் மட்டும் *வரிக்குட்படுத்தப்படலாம்.*

*(அ)* *அவரின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக மற்றைய ஒப்பந்த அரசில் நிரந்தரமான ஓர் அடிப்படையானது* தொடர்ந்தும் அவருக்கு இருப்பின் அத்தகையதொரு வருமானத்தினை மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிப்புக்குட்படுத்த *முடியுமானவிடத்து, குறித்த மற்றைய அரசில் அறவிடக் கூடிய அந்நிரந்தர அடிப்படைக்கு சமமாகக் கூடிய வருமான அளவுக்கு மட்டும் வரி விதிக்கப்படலாம் ; அல்லது*

*(ஆ)* *அவர் மற்றைய அரசில் தங்கியிருக்கும் காலப்பகுதி அல்லது காலப்பகுதிகள் தொடர்புடைய நிதியாண்டில் ஆரம்பமாகும் அல்லது முடிவடையும் ஏதேனும் பன்னிரண்டு மாத காலப்பகுதியில் மொத்தமாக 183 நாட்களை விஞ்சியிருக்குமாயின், அவ்விடயத்தில் மற்றைய அரசில் மேற்கொள்ளப்பட்ட செயலாற்றுகையிலிருந்து கிடைக்கப் பெற்ற வருமானம் மாத்திரம் அரசில் வரி விதிப்பனவு செய்யப்படலாம்.*

*2.* *'உயர் தொழில் சேவைகள்' என்ற சொல்லில் விசேடமாக சுயாதீன விஞ்ஞான, இலக்கிய, கலை சார்ந்த கல்விசார் அல்லது கற்பித்தல் நடவடிக்கைகள் போன்றவையும் அவ்வாறே மருத்துவர்கள், சட்டத்தரணிகள், பொறியியலாளர்கள், கட்டிடக் கலைஞர்கள், பல் வைத்தியர்கள் மற்றும் கணக்காளர்களின் சுயாதீன நடவடிக்கைகளையும் உள்ளடக்குகின்றன.*

*உறுப்புரை 15*

**சார்ந்துள்ள தனிப்பட்ட சேவைகள்**

1. இந்த ஒப்பந்தத்தின் 16, 18 மற்றும் 19 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய ஒப்பந்த அரசொன்றின் வதியுனர் ஒருவர் தனது தொழில் மூலம் பெறும் சம்பளங்கள், வேதனங்கள் மற்றும் அதனை ஒத்த வேதனாதிகள் மற்றைய ஒப்பந்த நாட்டில் வதியுனர் தொழில் புரியும் பட்சத்தில் அன்றி மேற்குறித்த அரசில் மாத்திரம் வரி விதிப்புக்குள்ளாக்கல் வேண்டும். அவ்வாறு தொழில் புரியும் பட்சத்தில் அந்த தொழில் மூலம் உழைக்கும் ஊதியத்தை மேற்கூறிய மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிப்புக்குள்ளாக்க முடியும்.

2. 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு பங்கம் ஏற்படாத வகையில் மற்றைய ஒப்பந்த அரசில் ஆற்றப்படும் ஊதியம் தொடர்பில் ஒப்பந்த அரசில் வதியுமொருவராற் பெறப்படும் வேதனம், அந்த முதற் குறிப்பிட்ட ஒப்பந்த அரசில் மட்டுமே பின்வரும் காரணங்களுக்காக வரி விதிப்புக்குள்ளாகும் :

(அ) நிதியாண்டு தொடர்பில் அதன் ஆரம்பத்தில் அல்லது முடிவில் ஏதேனும் பன்னிரண்டு மாதங்களில் மொத்தமாக 183 நாட்களை விஞ்சாத காலப்பகுதியொன்றினை அல்லது காலப்பகுதிகளுக்கான மற்றைய அரசில் தற்போது வேதனத்தினைப் பெறுபவராக இருப்பின், அத்துடன்

(ஆ) வேதனங்கள், மற்றைய ஒப்பந்த அரசில் வதியாத தொழில் தருநரொருவரால் அல்லது அவர் சார்பில் செலுத்தப்பட்டிருப்பின், அத்துடன்

(இ) அவ்வேதனம் தொழில் தருநர் மற்றைய ஒப்பந்த அரசில் வைத்திருக்கும் நிரந்தர நிறுவனமொன்றினால் அல்லது நிரந்தர அடிப்படையினால் செலுத்தப்பட்டிருக்காவிடின்.

3. இந்த உறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு பங்கம் ஏற்படாத வகையில், ஒப்பந்த அரசொன்றின் தொழில் முயற்சியினால் சர்வதேசப் போக்குவரத்தில் இயக்கப்படும் கப்பல் அல்லது வானூர்தியினால் ஆற்றப்படும் தொழில் தொடர்பில் பெறப்படும் வேதனம் அந்த தொழில் முயற்சியின் பயன்மிகு முகாமைத்துவம் அமைந்துள்ள ஒப்பந்த அரசில் வரி விதிப்புக்குள்ளாக்கப்படலாம்.

*உறுப்புரை 16*

**பணிப்பாளர்கள் கட்டணங்கள்**

ஒப்பந்த அரசொன்றில் வதியும் ஒருவர், மற்றைய ஒப்பந்த அரசொன்றில் வதிவுள்ள கம்பனியொன்றின் பணிப்பாளர் சபை அல்லது அதனையொத்த வேறு ஏதேனும் சபையொன்றில் உறுப்பினராக பதவியை வகிப்பதன் மூலம் பெறும் பணிப்பாளர் கட்டணங்கள் மற்றும் அதனையொத்த கொடுப்பனவுகள் மீது அந்த மற்றைய அரசில் வரி விதிக்கப்படலாம்.

*உறுப்புரை 17*

**கலைஞர்களும் விளையாட்டு வீரர்களும்**

1. 14 மற்றும் 15 ஆம் உறுப்புரைகளின் ஏற்பாடுகளுக்கு பங்கம் ஏற்படாத விதத்தில் ஒப்பந்த அரசில் வதியுமொருவர் அரங்கம், இயக்கத் திரைப்படம், வானொலி அல்லது தொலைக்காட்சி கலைஞராக அல்லது இசைக் கலைஞராக அல்லது விளையாட்டு வீரராக அல்லது தனிப்பட்ட தொழிற்பாடுகள் மூலம் மற்றைய ஒப்பந்த அரசில் பெறுகின்ற வருமானத்தின் மீது அத்தொழிற்பாடுகள் இடம்பெறும் ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்படலாம்.

2. கலைஞர் ஒருவர் அல்லது விளையாட்டு வீரர் ஒருவருக்கு அவரின் தனிப்பட்ட முயற்சிகளிலிருந்து கிடைக்கும் வருமானங்கள் அக்கலைஞருக்கு அல்லது விளையாட்டு வீரருக்கு சேராமல் வேறொருவருக்கு சேருமிடத்து 7, 14 மற்றும் 15 ஆம் உறுப்புரைகளின் ஏற்பாடுகளுக்கு பங்கம் ஏற்படாத வகையில் அவ்வருமானங்களின் மீது அக்கலைஞர் அல்லது விளையாட்டு வீரரின் முயற்சிகள் இடம் பெறும் ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்படலாம்.

3. 1 ஆம் 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கு பங்கம் ஏற்படாத வகையில், ஒப்பந்த அரசுகளுக்கிடையிலான கலாச்சார உடன்படிக்கை அல்லது ஏற்பாட்டின் கீழ் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானம் அப்பயணத்திற்கு ஒப்பந்த அரசுகளில் ஒன்றின் உள்ளூராட்சி நிறுவனம் ஒன்று அல்லது நியதிச் சட்ட தாபனம் ஒன்று பூரணமான அல்லது போதியளவு உதவியினை வழங்கியிருப்பின் மாத்திரமே அச்செயற்பாடுகளிலிருந்து பெறப்படும் வருமானங்களுக்கு அவை மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த அரசில் விலக்களிக்கப்படலாம்.

*உறுப்புரை 18*

**ஓய்வூதியங்கள் மற்றும் ஆண்டுத் தொகைகள்**

1. 19 ஆம் உறுப்புரையின் 2 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க, ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் ஒருவருக்கு மற்றைய கடந்த காலத்தில் ஒப்பந்த அரசில் செய்த தொழிலை அல்லது சேவையைக் கருத்தில் கொண்டு அம் மற்றைய ஒப்பந்த அரசின் மூலங்களிலிருந்து செலுத்தப்படும் ஓய்வூதியம் மற்றும் அதையொத்த ஊதியங்களின் மற்றும் ஆண்டுத் தொகைகள் மீது அந்த ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்படலாம்.

2. 'ஆண்டுத் தொகை' என்ற சொல்லின் பொருள் பணத்தை அல்லது பணத்தின் பெறுமதியில் மற்றும் போதியளவு விபரத்திரட்டில் கொடுப்பனவு செய்வதற்கான கடப்பாடொன்றின் கீழ் குறித்த காலப்பகுதியொன்றுக்குள் அல்லது குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியின்போது அல்லது வாழ்நாளில் காலத்திற்குக்காலம் செலுத்துவதற்கு குறிப்பிடப்பட்டதாகும்.

3. 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறாயினும், ஒப்பந்த அரசினால் சமூக பாதுகாப்புத் தொகுதியின் ஓர் அங்கமான அரச திட்டங்களுக்காக வழங்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் இதர கொடுப்பனவுகளுக்காக ஒப்பந்த அரசில் மாத்திரமே வரி விதிக்கப்படலாம்.

*உறுப்புரை 19*

**அரசாங்க சேவை**

1. (அ) ஒப்பந்த அரசொன்று, உள்ளூர் அதிகார சபையொன்று அல்லது நியதிச்சட்ட அமைப்பொன்று, அவற்றுக்கு ஆற்றப்படும் சேவைகளுக்காக எவரேனும் ஆளுக்கு ஓய்வூதியம் தவிர்ந்த, செலுத்தப்படும் சம்பளங்கள், வேதனங்கள் மற்றும் அதனையொத்த வேதனாதிகளுக்கு அவ்வரசில் மட்டுமே வரி விதிக்கப்பட முடியும்.

(ஆ) எவ்வாறாயினும், அத்தகைய சேவைகள் மற்றைய அரசில் ஆற்றப்பட்டிருப்பின் அத்தகைய நபர் ஒப்பந்த அரசில் வதிபவராயின் அத்தகைய அவர்,

I. அவ் ஒப்பந்த அரசின் பிரசையாக; அல்லது

II. அத்தைய சேவைகளை ஆற்றும் நோக்கத்திற்காக மட்டும் அவ் அரசில் வதிபவராக மாறியிராதவராகவும் இருப்பின், அத்தகைய சம்பளங்கள், வேதனங்கள் மற்றும் அதனையொத்த வேதனாதிகளின் மீது மற்றைய ஒப்பந்த அரசில் மாத்திரம் வரி விதிக்கப்பட முடியும்.

2. ஒப்பந்த அரசொன்றினால், உள்ளூர் அதிகார சபையொன்றினால் அல்லது நியதிச்சட்ட அமைப்பொன்றினால் உருவாக்கப்பட்ட நிதிகளிலிருந்து அவ் ஒப்பந்த அரசுக்கு, உள்ளூர் அதிகார சபையொன்றுக்கு அல்லது நியதிச் சட்ட அமைப்பொன்றுக்கு எவரேனும் ஆள் ஒருவர் ஆற்றிய சேவைகள் தொடர்பில் அவ் ஆளுக்கு செலுத்தப்படும் ஏதேனும் ஓய்வூதியம் மீது அந்த அரசில் மட்டுமே வரி விதிக்கப்பட முடியும்.

3. ஒப்பந்த அரசொன்றினால், உள்ளூர் அதிகார சபையொன்றினால் அல்லது நியதிச்சட்ட அமைப்பொன்றினால் நடாத்தப்படும் தொழில் முயற்சியொன்று தொடர்பில் ஆற்றப்படும் சேவைகளுக்கான சம்பளங்கள், வேதனங்கள், மற்றும் அதனையொத்த வேதனாதிகள் மற்றும் ஓய்வூதியங்கள் தொடர்பில் 15, 16 மற்றும் 18 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல் வேண்டும்.

*உறுப்புரை 20*

**ஆசிரியர்களும் ஆராய்ச்சியாளர்களும்**

1. மற்றைய ஒப்பந்த அரசுக்கு விஜயம் செய்வதற்கு உடன் முந்திய காலத்தில் மற்றைய அவ் ஒப்பந்த நாட்டில் வந்த ஆளொருவர் மற்றைய ஒப்பந்த அரசின் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில், கல்லூரி ஒன்றில், பாடசாலை ஒன்றில் அல்லது அதனையொத்த நிறுவனமொன்றில் அல்லது விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனமொன்றில் அழைப்பின் பேரில் கற்பிக்கும் அல்லது ஆராய்ச்சியில் ஈடுபடும் நோக்கில் அல்லது அவ்விரு நோக்கங்களுக்குமாக அத்தகைய கல்விசார் அல்லது ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அவர் வருகை தந்த திகதியிலிருந்து இரு வருடங்களுக்கு விஞ்சாத காலப்பகுதிக்கு விஜயம் செய்வாராயின், அத்தகைய காலப்பகுதிக்கு, அத்தகைய கற்பித்தல் அல்லது ஆராய்ச்சி தொடர்பில் பெற்ற வேதனத்திற்கு அம்மற்றைய ஒப்பந்த அரசில் வரி விலக்களிக்கப்பட முடியும்.

2. 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள 'அங்கீகரிக்கப்பட்ட' எனும் சொல்லின் பொருள் ஒப்பந்த அரசில் அமைந்துள்ள பல்கலைக்கழகம், கல்லூரி, பாடசாலை அல்லது வேறு அதனையொத்த கல்வி நிறுவனங்கள் அல்லது விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆகும்.

3. அடிப்படையில் குறிப்பிட்ட ஆளொருவரின் அல்லது ஆட்களின் தனிப்பட்ட நலன்களுக்காக ஆராய்ச்சிகளை நடாத்துவதாயின் அத்தகைய ஆராய்ச்சிகளை நடாத்துவது தொடர்பில் பேராசிரியர் ஒருவர் அல்லது ஆசிரியர் ஒருவர் பெறுகின்ற வேதனம் தொடர்பாக இவ்வுறுப்புரை ஏற்புடையதாகக் கூடாது.

*உறுப்புரை 21*

**மாணவர்கள் மற்றும் தொழில் பயிலுநர்கள்**

1. ஒப்பந்த அரசொன்றுக்கு வருவதற்கு உடன் முந்திய காலத்தில் மற்றைய ஒப்பந்த நாட்டில் வதியும் அல்லது வதிந்த அத்துடன் தனது கல்வி அல்லது பயிற்சிக்காக மட்டும் முதலில் கூறப்பட்ட ஒப்பந்த அரசில் இருக்கின்ற மாணவரொருவர், பயிலுனர் ஒருவர் அல்லது தொழில் பயிலுநர் ஒருவர் தனது பராமரிப்பு, கல்வி அல்லது பயிற்சி அலுவல்களுக்காக பெறும் கொடுப்பனவுகளை அவ்வரசிற்கு புறம்பான மூலங்களிலிருந்து பெறுவதாயின் அவற்றுக்கு அந்த அரசில் வரிகளிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டும்.

2. ஒப்பந்த அரசுகளில் ஒன்றில் வசிக்கும் தனிநபரொருவர் மற்றைய ஒப்பந்த அரசில் தற்காலிக ஊழியராக அல்லது ஒப்பந்த அடிப்படையிலான ஊழியராக முதலில் குறிப்பிட்ட ஒப்பந்த அரசில் வசிப்பவராக மற்றைய ஒப்பந்த அரசினால் அல்லது யாதாயினும் ஓர் சர்வதேச அமைப்பினால் நடாத்தப்படும் நிகழ்ச்சியில் பங்குபற்றுனராக பின்வரும் அடிப்படை நோக்கத்திற்காக

   (அ) முதலில் குறிப்பிட்ட ஒப்பந்த அரசு அல்லது அதனுடன் தொடர்புடைய வதிவிடத்தைக் கொண்ட நபரிடமிருந்து தொழில்நுட்ப, தொழில்சார், வியாபார அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக; அல்லது

   (ஆ) மற்றைய ஒப்பந்த அரசில் பல்கலைக்கழகமொன்றில் அல்லது வேறு கல்வி நிறுவனங்களில் கல்வி கற்பவராக இருப்பவருக்கு;

மற்றைய ஒப்பந்த அரசினால் அவரது தனிப்பட்ட வருமானத்திற்கு இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத வகையில் வரிகளிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டும்.

*உறுப்புரை 22*

**ஏனைய வருமானங்கள்**

1. இவ் ஒப்பந்தத்தில் முன் குறிப்பிடப்பட்ட உறுப்புரைகளில் குறிப்பிடப்படாத ஒப்பந்த அரசொன்றில் வதிபவர் ஒருவரின் வருமான விடயம் எந்தவொரு அரசில் எழுத்தாலும் அதே அரசில் மட்டும் வரி விதிப்புக்குட்படுத்தப்படல் வேண்டும்.

2. ஒப்பந்த அரசொன்றின் வதியும் ஆளொருவர், மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிரந்தர தாபனமொன்றினூடாக வியாபாரமொன்றினைக் கொண்டு நடாத்துவாராயின் அல்லது அம்மற்றைய அரசில் சுயாதீனமாக தனிப்பட்ட கோவைகளை மேற்கொள்வாராயின் அத்துடன் வருமானம் செலுத்தப்படும் உரிமை அல்லது ஆதனம் மேலே குறிப்பிடப்பட்ட நிரந்தரத் தாபனத்துடன் அல்லது நிரந்தர அடிப்படையுடன் தொடர்புடையதாகவும் இருப்பின், இவ்வொப்பந்தத்தின் உறுப்புரை 6 இன் 2 ஆம் பந்தியில் வரைவிலக்கப்படுத்தப்பட்டுள்ளவாறு அசையா ஆதனங்களிலிருந்து கிடைக்கும் வருமானங்கள் அல்லாத வருமானங்கள் மீது இவ் உறுப்பரையின் 1 ஆம் பந்தியிலுள்ள ஏற்பாடுகள் பொருந்தமாட்டா. அவ்வாறான சந்தர்ப்பங்களில் உறுப்புரை 7 இன் அல்லது உறுப்புரை 14 இன் ஏற்பாடுகள் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு ஏற்புடையதாகுதல் வேண்டும்.

3. *1 ஆம் மற்றும் 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கு பங்கம் ஏற்படாதவாறு, இந்த நடவடிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் மற்றைய ஒப்பந்த அரசில் எழுகின்ற விடயங்களுடன் சம்பந்தப்படாமல் ஒப்பந்த அரசொன்றில் வதிபவரின் வருமான விடயங்களில் மற்றைய அரசில் வரி விதிக்கப்படலாம்.*

*உறுப்புரை 23*

**இரட்டைவரி விதிப்பினை நீக்குதல்**

1. *இந்த ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, ஒப்பந்த அரசு ஒன்றில் வதிபவர் மற்றைய ஒப்பந்த அரசில் வருமானம் உழைக்குமிடத்து, மற்றைய ஒப்பந்த அரசில் வரி செலுத்தும் போது முதலில் குறிப்பிட்ட ஒப்பந்த அரசு அந்த வதிபவரின் வருமானத்தின் மீதான வரியிலிருந்து மற்றைய ஒப்பந்த அரசில் செலுத்திய வரிக்குச் சமமான தொகையினை கழிப்பனவாக வழங்குதல் வேண்டும். எவ்வாறாயினும், அத்தகைய கழிப்பனவு எத்தகையதாக இருப்பினும் கழிப்பனவு வழங்குவதற்கு முன்னர் கணக்கிடப்பட்ட தேவையைப் பொறுத்து மற்றைய அரசில் வரி விதிப்புக்குள்ளாகும் வருமானத்துடன் சேர்க்கக் கூடிய வருமானப் பகுதியை விஞ்சக் கூடாது.*

2. *இவ் ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் ஒருவர் உழைக்கும் வருமானத்திற்கு அவ் அரசில் வரி விலக்கு அளிக்கப்படுமாயின், அவ் அரசு அவ்வாறு வதிபவரின் மீதி வருமானத்தின் மீதான வரியைக் கணிப்பிடும்போது அவ்வாறு விலக்களிக்கப்பட்ட வரியைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.*

*உறுப்புரை 24*

**பாகுபாடு காட்டாமை**

1. *ஒரு ஒப்பந்த அரசில் வதிபவர்களுக்கு மற்றைய ஒப்பந்த அரசில், அந்த அரசில் சம அந்தஸ்திலுள்ள வதிபவர்களுக்கு விதிக்கப்படும் வரிகளை விட வேறுபட்ட அல்லது சுமக்க முடியாதளவுக்கு மிகவும் கடினமான எந்தவொரு வரியினையும் அல்லது அதனுடன் தொடர்புடைய தேவைகளுக்கு விசேடமான வதிவுரிமையாகக் கருதி வரி விதிக்கக் கூடாது.*

2. *ஒப்பந்த அரசொன்றில் தொழில்முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசில் வைத்திருக்கும் நிலையான தாபனமொன்றின் மீது அச்செயற்பாடுகளிலேயே ஈடுபடும் மற்றைய அரசின் தொழில் முயற்சிகள் தொடர்பில் அறவிடப்படும் வரிகளை விடவும் குறைந்த நன்மைகளைத் தரக்கூடியவாறு மற்றைய அரசில் வரி அறவிடுதல் கூடாது. ஒப்பந்த நாடொன்றில் சிவில் நிலைமை அல்லது சொந்த குடும்ப பொறுப்புக்கள் காரணமாக வரி விதிப்பு நோக்கங்களுக்காக வழங்கும் ஏதேனும் தனிப்பட்ட விசேட தொகைகள், நிவாரணங்கள் அல்லது கழிப்பனவுகளை மற்றைய ஒப்பந்த அரசின் வதிபவர்களுக்கு வழங்குவதற்காக இவ் ஏற்பாட்டின் மூலம் கட்டுப்பட்டுள்ளது என விளங்கிக் கொள்ளுதலாகாது.*

3. *உறுப்புரை 9 இன் 1 ஆம் பந்தி உறுப்புரை 11 இல் 8 ஆம் பந்தி, உறுப்புரை 12 இன் 6 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் நீங்கலாக, ஒப்பந்த அரசொன்றிலுள்ள தொழில்முயற்சியொன்றினால் அத்தகைய தொழில்முயற்சியின் வரி விதிக்கத்தக்க இலாபங்களைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக மற்றைய ஒப்பந்த அரசில் வதிபவருக்கு செலுத்தப்படும் வட்டி, உரிமப் பங்கீட்டுத் தொகை மற்றும் ஏனைய கட்டு நிதிகள் முதலில் குறிப்பிடப்பட்ட நாட்டின் வதிபவரொருவருக்கு அவர்கள் செலுத்தியிருப்பார்களாயின், அதே நிபந்தனைகளின் கீழ் கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.*

4. *மற்றைய ஒப்பந்த அரசின் வதிபவர் ஒருவர் அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவர்களால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தன்வசமாக்கிக் கொண்டிருக்குமிடத்து அல்லது நிருவகிக்குமிடத்து முதலாவதாக குறிப்பிடப்பட்ட அரசின் தொழில் முயற்சிகள் விதிக்கப்பட்ட வரிகள் அல்லது விதிவிலக்குகளைப் பார்க்க வித்தியாசமான அல்லது தாங்க முடியாத மிகக் கஷ்டமான எவ்வித வரி விதிப்போ அல்லது தேவைப்பாடோ முதல் குறிப்பிட்ட அரசில் பாதிக்கப்படலாகாது.*

5. *இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகள் இவ் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரிகளுக்கு மாத்திரமே ஏற்புடையதாகும்.*

*உறுப்புரை 25*

**இருவாயினொத்த உடன்பாட்டு நடைமுறை**

1. *ஒப்பந்த நாடொன்றில் வதிபவர் ஒருவர் ஒப்பந்த நாடுகளில் ஒன்றின் அல்லது இரண்டினும் நடவடிக்கைகளின் விளைவாக இவ்வுடன்படிக்கைக்கு மாறான முறையில் தன் மீது வரி விதிக்கப்படுகின்றது அல்லது வரி விதிக்கப்படலாமெனக் கருதுவாராயின், அவ்வரசுகளின் வரி விதிப்புச் சட்டங்களினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பரிகாரங்களைக் கவனத்தில்*

*கொள்ளாது அவர் தான் வதியும் ஒப்பந்த நாட்டின் தகுதிவாய்ந்த அதிகாரியிடம் அவரது விடயம் 24 ஆம் உறுப்புரையின் 1 ஆம் பந்தியின் கீழ் உள்ளடங்குமாயின், அவர் வதிபவராகவுள்ள அந்த ஒப்பந்த நாட்டின் தகுதிவாய்ந்த அதிகாரியிடம் விளக்கங்களைச் சமர்ப்பிக்கலாம். இவ் ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியதாக அமையாத வரி விதிப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதற்குக் காரணமான செயற்பாடு தொடர்பான முதலாம் அறிவித்தல் வெளியிடப்பட்டு மூன்று வருட காலத்தினுள் அவ்விளக்கங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.*

*2.* *தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அவ்வாட்சேபனை நியாயமானதாக தோன்றியும் தாமாக ஒரு பொருத்தமான தீர்வுக்கு வர முடியாமலும் இருப்பின், அவர் இவ் உடன்படிக்கைக்கு மாறான வகையிலான வரி விதிப்பினைத் தவிர்க்கும் பொருட்டு மற்றைய ஒப்பந்த அரசின் தகுதிவாய்ந்த அதிகாரியுடனான இருவாயினொத்த உடன்பாட்டின் மூலம் அவ்விடயத்தினைத் தீர்த்து வைக்க முயற்சிக்கலாம். எடுக்கப்படும் எந்த உடன்பாடும் ஒப்பந்த நாடுகளின் உள்ளூர்ச் சட்டத்தின் எத்தகைய காலவரையறையினையும் பொருட்படுத்தாது நடைமுறைப்படுத்தப்படும்.*

*3.* *இந்த ஒப்பந்தத்தினைப் பொருட்கோடல் செய்வது அல்லது ஏற்புடையதாக்குவது தொடர்பில் ஏதேனும் சிரமங்கள் அல்லது சந்தேகங்கள் தோன்றுமாயின், அவற்றை இருவாயினொத்த உடன்பாட்டின் மூலம் தீர்த்துக் கொள்வதற்கு ஒப்பந்த அரசுகளின் தகுதிவாய்ந்த அதிகாரிகள் முயற்சித்தல் வேண்டும். இவ் ஒப்பந்தத்தில் ஏற்பாடுகள் எதுவும் காணப்படாத சந்தர்ப்பங்களில் இரட்டை வரி விதிப்பினை நீக்குவது தொடர்பில் அவர்கள் கூட்டாகப் பேச்சுவார்த்தை நடாத்தப்படுதல் வேண்டும்.*

*4.* *மேலேயுள்ள பந்திகளின் கருத்துக்கள் தொடர்பில் உடன்பாட்டுக்கு வரும் நோக்கில் ஒப்பந்த அரசுகளின் தகுதிவாய்ந்த அதிகாரிகள் நேரடியாக ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாற்றங்களைச் செய்து கொள்ள முடியும்.*

*உறுப்புரை 26*

**தகவல் பரிமாற்றம்**

*1.* *இந்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக அல்லது நிருவகிப்பதற்காக இந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வரிகள் தொடர்பில் முரண்படாத உள்நாட்டுச் சட்டங்களை செயற்படுத்துவதுடன் உடன்படிக்கையுடன் தொடர்புபடுகின்றன என அனுமானிக்க முடியுமான தகவல்களை ஒப்பந்த அரசுகளின் தகுதிவாய்ந்த அதிகாரிகள் பரிமாற்றம் செய்து கொள்ளுதல் வேண்டும். தகவல் பரிமாற்றமானது 1 ஆம் மற்றும் 2 ஆம் உறுப்புரைகளினால் கட்டுப்படுத்தப்படமாட்டாது.*

*2.* *1 ஆம் பந்தியின் கீழ் ஒப்பந்த அரசொன்றுக்கு கிடைக்கும் எந்தவொரு தகவலையும் அந்த அரசின் உள்நாட்டுச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட அந்தரங்க தகவலாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகவலானது, வரி மதிப்பிடல் அல்லது வரி சேகரித்தல், அவ்வரி முறைமைகளை அமுல்படுத்துதல், வழக்குத் தொடருதல், 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வரிகள் தொடர்பான மேன்முறையீடுகள் தொடர்பில் தீர்மானம் எடுத்தல் (நீதிமன்றங்கள், நிருவாக சபை உள்ளடங்கலான) என்பவற்றுடன் தொடர்புடைய ஆட்களுக்கு அல்லது அதிகாரிகளுக்கு மாத்திரமே வெளிப்படுத்த முடியும். அத்தகைய ஆட்கள் அல்லது அதிகாரிகள் அத்தகைய நோக்கங்களுக்காக மட்டுமே அத்தகவலைப் பயன்படுத்த முடியும். அவர்கள் பகிரங்க நீதிமன்ற நடவடிக்கைகளின்போது அல்லது நீதிமன்றத் தீர்ப்புக்களில் அலுவல்களை வெளிப்படுத்த முடியும்.*

*3.* *1, 2 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் ஒப்பந்த அரசுகளின் மீது பின்வரும் கடப்பாடுகளை விதிக்குமென எச்சந்தர்ப்பத்திலும் கருதப்படக் கூடாது:*

*(அ)* *அவ்வொப்பந்த அரசின் அல்லது மற்றைய அரசின் சட்டங்கள் மற்றும் நிருவாக நடைமுறைகளுடன் வேறுபட்ட வகையில் நிருவாக நடவடிக்கைகளை முன்னெடுத்தல்;*

*(ஆ)* *அவ்வொப்பந்த அரசின் அல்லது மற்றைய அரசின் சட்டங்களின் கீழ் அல்லது சாதாரண நிருவாக முறையின் கீழ் பெற முடியாத தகவல்களை வழங்குதல்;*

*(இ)* *வணிக, வியாபார, கைத்தொழில், வர்த்தக அல்லது தொழில்சார் இரகசியங்களை அல்லது வணிக முறைமை அல்லது அரச கட்டளைக்கு* (order public) *முரணாக விளங்கக்கூடிய வகையில் ஏதேனுமொரு தகவலை வழங்குதல்.*

*4.* *இந்த உறுப்புரைக்கு அமைவாக ஒப்பந்த அரசொன்றினால் தகவல்கள் வேண்டப்படுமாயின், மற்றைய ஒப்பந்த அரசு தனது வரி நோக்கங்களுக்காக அத்தகைய தகவல்கள் அவசியப்படாத போதிலும் வேண்டப்பட்ட தகவல்களைப் பெறுவதற்காக அத்தகவல்களைச் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மேலே குறிப்பிட்ட வாக்கியத்திலுள்ள கடப்பாடானது 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட வரையறைகளுக்குட்பட்டதாக இருப்பினும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அந்த வரையறைகளினூடாக ஒப்பந்த அரசு ஒன்று வெறுமனே அத்தகைய தகவல்கள் உள்நாட்டு விடயங்களில் தொடர்பில்லாத காரணத்தினால் அத்தகவல்களை வழங்காதிருத்தல் கூடாது.*

5. வங்கியொன்றிடம், வேறு நிதி நிறுவனத்திடம் பெயர் குறிப்பீடு செய்யப்பட்ட ஒருவரிடம் அல்லது ஒரு முகவராண்மையின் தொழிற்பட்டு வரும் ஆளொருவரிடம் காணப்படும் தகவல் அல்லது நம்பிக்கைக்குரியவர் என்ற அடிப்படையில் அல்லது அத்தகவல்கள் ஆளொருவரின் உரிமை சார்ந்த நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்ற காரணத்தினால் மாத்திரம் ஒப்பந்த அரசொன்று அத்தகவல்களை வழங்க மறுப்பதற்கு 3 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் அனுமதிப்பதாக விளங்கிக் கொள்ளக் கூடாது.

*உறுப்புரை 27*

**வரி வசூலிப்பிற்கான உதவிகள்**

1. ஒப்பந்த அரசுகள் அவற்றுக்கிடையில் இவ் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தண்டனைத் தன்மை அல்லாத வட்டி, முகாமைத்துவ அபராதம் மற்றும் தண்டப்பணம் உள்ளடங்கலாக வரி வசூலிப்பிற்கான உதவிகளை வழங்க பொறுப்பேற்கும்.

2. ஒப்பந்த அரசினால் இவ்வரி வசூலிப்பிற்காக கோரப்படும் உதவிகளானது ஒப்பந்த அரசின் சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு மேற்கூறப்பட்ட வரிகள் இறுதியாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவ் ஒப்பந்த அரசினால் தகுதிவாய்ந்த அதிகாரியினால் சான்றுப்படுத்தப்படுதலை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். ஒப்பந்த அரசு அதன் உள்நாட்டு வரி வசூலிப்புச் சட்டங்களுக்கு உட்பட்டு மற்றும் வரி செலுத்துபவர்கள் வரி வசூலிப்பைத் தடுக்காத விதத்தில் வரிகளை தீர்மானிப்பதே இவ்வுறுப்புரையின் நோக்கமாகும்.

3. 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்படும் கோரிக்கையானது பொருத்தப்பாடுடைய இடங்களில் இறுதி நிருவாக அல்லது நீதித்துறையின் உத்தியோகபூர்வ முடிவின் பிரதியுடன் சேர்த்து உத்தியோகபூர்வ செயற்படுத்தலுக்கான ஆவணத்தினால் ஆதரிக்கப்படுதலும் வேண்டும்.

4. மற்றைய ஒப்பந்த அரசினால் வரி சேகரிப்பிற்காக ஒப்பந்த அரசின் கோரிக்கையானது ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில், அந்த கோரிக்கையானது, அந்த மற்றைய அரசின் சொந்த வரியாகக் கருதி நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

5. மேன்முறையீடு செய்யக்கூடிய வரிகள் தொடர்பாக ஒப்பந்த அரசின் அதிகாரம்பெற்ற தகுதிவாய்ந்த நிறுவனங்களினால், அதன் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில், மற்றைய ஒப்பந்த அரசின் அதிகாரம்பெற்ற தகுதிவாய்ந்த நிறுவனங்களிடம் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் பாதுகாப்பான முறையில் கையாளப்பட வேண்டும். ஒப்பந்த அரசின் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேண்டுகோளானது மற்றைய ஒப்பந்த அரசினால் அவ் ஒப்பந்த அரசின் வேண்டுகோள் அதன் சொந்த வரி எனக் கருதி அவ் வேண்டுகோளினைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

6. இவ்வுறுப்புரைக்கு இணங்க ஒப்பந்த அரசின் தகுதிவாய்ந்த அதிகாரம்பெற்ற நிறுவனங்களினால் சேகரிக்கப்படும் தொகையானது மற்றைய ஒப்பந்த அரசின் தகுதிவாய்ந்த அதிகாரம்பெற்ற நிறுவனங்களிடம் முன்வைக்கப்பட வேண்டும். இது தவிர ஒப்பந்த அரசின் தகுதிவாய்ந்த அதிகாரம் பெற்ற நிறுவனங்கள் கோரப்பட்டுள்ள வரி சேகரிப்பு உதவியை வழங்கும்போது ஏற்படும் சாதாரண செலவினங்களை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

7. இவ் உறுப்புரையின் எவையும் ஒப்பந்த அரசின் பின்வரும் கோரிக்கைகள் எதனையும் பரிசீலனை செய்யக்கூடாது:

(அ) முகாமைத்துவ பயன்பாடுகளில் ஒப்பந்த அரசின் அல்லது மற்றைய ஒப்பந்த அரசின் சட்டதிட்டங்களில் இருந்து வேறுபடும் முகாமைத்துவ அளவீடுகளை முன்னெடுத்தல்;

(ஆ) அரச கொள்கைகளுக்கு மாறான அளவீடுகளை முன்னெடுத்தல்;

(இ) மற்றைய ஒப்பந்த அரசின் சட்டங்கள் அல்லது முகாமைத்துவ பயன்பாடுகளின் கீழ் காணப்படும் அனைத்துச் சேகரிப்பு நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை எனில் சேகரிப்புகளுக்கான உதவிகளை வழங்குதல்;

(ஈ) ஒப்பந்த அரசின் முகாமைத்துவ சுமையானது மற்றைய ஒப்பந்த அரசினால் பெறப்பட்ட பயன்களுக்கு முற்றிலும் சமமற்ற தன்மையைக் காட்டும் சந்தர்ப்பங்களில் உதவிகளை வழங்குதல்.

*உறுப்புரை 28*

**இராஜதந்திர தூதுக்குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் பேராளர் பதவிகள்**

இந்த உடன்படிக்கையின் பகுதியெதுவும் சர்வதேச சட்டத்தின் பொது விதிகளின் கீழ் அல்லது விசேட உடன்படிக்கைகளின் ஏற்பாடுகளின் கீழ் உள்ளடங்கும் இராஜதந்திர தூதுக்குழுக்களின் அங்கத்தவர்கள் மற்றும் பேராளர் பதவிகளுக்குரிய நிதி ரீதியான சிறப்புரிமைகளைப் பாதிக்கக் கூடாது.

*உறுப்புரை 29*

**நடைமுறைப்படுத்துதல்**

1. திருத்திகரமாகவுள்ள இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தமது சட்டத்தினூடாக தேவையான நடைமுறைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக ஒவ்வொரு ஒப்பந்த அரசும் இராஜதந்திர வழிமுறைகளில் மற்றைய அரசுக்கு அறிவிக்க வேண்டும்.

2. இந்த உடன்படிக்கையானது,

(ஆ) இவ் ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் கலண்டர் வருடத்தினை அடுத்து வரும் கலண்டர் வருடத்தின் சனவரி மாதம் 01 ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் செலுத்தப்பட்ட அல்லது வரவு வைக்கப்பட்ட தொகையின் வருமான மூலத்தில் பிடித்து வைத்தல் வரி தொடர்பிலும்,

(ஆ) இவ் ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் கலண்டர் வருடத்தை அடுத்து வரும் வருடத்தின் சனவரி மாதம் 01 ஆந் திகதி அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கும் வரி விதிப்பாண்டில் ஈட்டப்பட்ட வருமானத்தின் மீதான மற்றைய வரிகள் தொடர்பிலும்,

ஏற்புடையதாதல் வேண்டும்.

*உறுப்புரை 30*

**முடிவுறுத்தல்**

1. ஏதேனும் ஒரு ஒப்பந்த அரசினால் முடிவுறுத்தப்படும் வரையில் இவ் ஒப்பந்தமானது நடைமுறையில் இருத்தல் வேண்டும். ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து ஐந்து வருட காலத்தின் பின்னர் வரும் ஏதேனும் ஒரு கலண்டர் வருடம் முடிவடைவதற்கு முன்னர் ஆகக் குறைந்தது ஆறு மாதங்களில் அல்லது அதற்கு முன்னர் இராஜதந்திர வழிமுறைகளில் முடிவுறுத்தல் தொடர்பான அறிவித்தலொன்றினை வழங்குவதனூடாக ஏதேனும் ஒரு ஒப்பந்த அரசு இவ் ஒப்பந்தத்தினை முடிவுறுத்த முடியும்.

2. அத்தகையதொரு சந்தர்ப்பத்தில்:

(அ) இவ் ஒப்பந்தத்தை முடிவுறுத்துவது தொடர்பான அறிவித்தல் வழங்கப்பட்ட கலண்டர் வருடத்தினை அடுத்துவரும் கலண்டர் வருடத்தின் சனவரி மாதம் முதலாம் திகதியன்று அல்லது அதன் பின்னர் செலுத்தப்பட்ட அல்லது வரவு வைக்கப்பட்ட தொகையின் வருமான மூலத்தில் பிடித்து வைத்தல் வரி தொடர்பிலும்;

(ஆ) அவ் அறிவித்தல் வழங்கப்பட்ட கலண்டர் வருடத்தை அடுத்துவரும் வருடத்தின் சனவரி மாதம் முதலாம் திகதி அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கும் வரி விதிப்பாண்டில் ஈட்டப்பட்ட வருமானத்தின் மீதான மற்றைய வரிகள் தொடர்பிலும் இவ் உடன்படிக்கை ஏற்புடைமை முடிவுறுத்தப்படும்.

இதற்கு சாட்சியாக அவர்களது அரசாங்கங்களினால் உரியவாறு அதிகாரம் வழங்கப்பெற்ற அதிகாரிகள் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

ஒரே சமமான அதிகாரங்களைக் கொண்ட சிங்கள, அரேபிய மற்றும் ஆங்கில மொழிகளில் இணைப்பிரதிகளுடன் 2018, ஒகத்து மாதம் 15 ஆந் திகதி கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது. பொருட்கோடலின் முரண்பாடுகள் ஏதேனும் காணப்படுமிடத்து, ஆங்கிலப் பிரதியே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

கௌரவ பிரசாத் காரியவசம்,
வெளிநாட்டு அலுவல்கள் செயலாளர்,
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
அரசாங்கம் சார்பில்.

கௌரவ கலாநிதி மஹ்மூத் அவாத் அல் ஹசன்,
ஓமான் இராஜதந்திர மற்றும் முதலமைச்சரின்
திணைக்களத்தின் பதில் செயலாளர்,
ஓமான் சுல்த்தான் இராச்சிய அரசாங்கத்தின் சார்பில்.

01-221

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.